விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-8544)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 30 திங்கட்கிழமை (16.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

## 310 கிலோ கஞ்சாவுடன் சாட்டியில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடற்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய ஊர்காவற்றுறை சாட்டி பகுதியில் நேற்று முன்தினம் 310 கிலோ கேரள கஞ்சாவினை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் லெப்டினனட் கமாண்டர் இசுரு சூரிய பண்டார தெரிவித்தார்.

கஞ்சாவை வைத்திருந்து அதனை விற்பனை செய்யும் நோக்கில் இருவர் செயற்படுவதாக கடற்படையினபுலனாய்வு அதிகாரிகளுக்கு இரக 23

## ரெலோவிலிருந்து வெளியேறியவர்களால் உதயமாகியது தமிழ்த் தேசியக் கட்சி

### தலைவராக ஸ்ரீகாந்தா, செயலாளராக சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீகாந்தா தலைமையில் புதிய கட்சி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்சிக்கு 'தமிழ் தேசியக் கட்சி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக இந்த புதிய கட்சி உதயமாகியுள்ளதாக ஸ்ரீகாந்தா நேற்று ஞாயிற்றுக் கிழமை அறிவித்துள்ளார்.

தமிழினத்தின் போர் வாளாக, தமிழினத்தின் கேடயமாக இந்த அமைப்பு தன்னை அர்ப்பணிக்கிறது எனவும் தமிழினம் தன்னைத்தானே ஆளவும் சுதந்திரத்தோடு வாழவும் விரும்புகிறது என்பதை மனதில் பதித்து தமிழ்த் தேசியக் கட்சி தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என அதன் தலை 23

### அகதிகள் உட்பட இந்தியாவில் தங்கியுள்ள

# இலங்கைத் தமிழ் மக்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும்

### தமிழக அமைச்சர் பாலாஜி கோரிக்கை



(புதுடில்லி)

**இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என வலியுறுத்தவே குடியுரிமை சட்டத்துக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு வழங்கியதாக தமிழக அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தெரிவித்துள்ளார் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

மதுரை விமான நிலையத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அகதிகள் உட்பட இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கக் கூடாது என்ற நோக்கம் பாரதிய ஜனதா கட்சிக்கு இல்லை எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்பதற்காகவே பாரதிய ஜனதா கட்சி எடுத்திருக்கும் நிலைப்பாட்டிற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி கூறினார்.

மேலும் இலங்கையில் இடம் பெற்ற இறுதி யுத்தத்தில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது மௌனமாக இருந்த 23

### சிறுமி துஷ்பிரயோகம்

## கிளிநொச்சியில் கடை எரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் அண்மையில் கடை ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் 11 வயதுடைய சிறுமி ஒருவரை பாலி 23

### மணல் கடத்தல்

## வாகனங்கள் தீக்கிரையாக்கப்படும்

### மக்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

மணல் கடத்தலில் ஈடுபட்டு வரும் டிப்பர் மற்றும் உழவு இயந்திரங்கள் தமது பகுதிகளுக்கு வர வேண்டாம் 24

## விக்னேஸ்வரனின் கட்சியோடு இணையத் தயார்

### ஸ்ரீகாந்தா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் சுரேஸ் பிரேமச் 23

## தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள்

### சமன் ரத்னாயக்க

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானதுடன், சபாநாயகருக்கும் கட்சித் தலை 23

## மாட்டுடன் மோதுண்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

### வவுனியாவில் துயரம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் மாட்டுடன் மோதுண்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ள துயரச் சம்பவம் நெடுங்கேணிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த பொன்னராசா விக்கினராசா (வயது - 41) என்ற குடும்பஸ்தரே 24

## தனி இராஜ்ஜியத்தைக் கோர எவருக்கும் இனி இடமில்லை

### ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கண்டி)

வாக்குகளைக் காரணம் காட்டி, தனி இராஜ்ஜியத்தையோ அல்லது தனியான அலகினையோ இனி மேல் எந்தவொரு அடிப்படைவாதிகளும் கோர முடியாத நிலைமை இலங்கையில் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஹெகலிய ரம்புக்வெல மேலும் கூறியுள்ளதா 23

## கட்சியினை பலப்படுத்துவதற்கு திருத்தங்களை சமர்ப்பிக்குக

### மாரப்பனவுக்கு ரணில் உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் தனக்கு தெரிவிக்குமாறு கட்சி 23



### குடியுரிமை திருத்தம்

## டில்லியில் வாகனங்கள் தீக்கிரை



23

## தாமரைப்பூ பறிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

### பூநகரியில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி நல்லதண்ணிக்குளம் பகுதியில் பூசைக்காக தாமரைப்பூ பறிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பூநகரி நெற்புலவைச் சேர்ந்த சுப்பிரமணியம் சத்தியசீலன் (வயது - 56) என்பவரே மேற்படி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை குறித்த நபர் தாமரைப் பூ பறிப்பதற்காக குளத்தில் 23

# வடக்கு- கிழக்கு இணைந்த சுயாட்சிதான் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு –சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு இணைந்த சுயாட்சிதான் நிரந்தர தீர்வென்பதே எமது கட்சியின் நிலைப்பாடு என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளரான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ரெலோவிலிருந்து பிரிந்து சென்ற ஸ்ரீகாந்தா.சிவாஜிலிங்கம் அணி, நேற்று 'தமிழ்த் தேசிய கட்சி' என்ற பெயரில் புதிய கட்சியை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

இதன்போது குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எம்.கே.சிவாஜிலிங்க்ம மேலும் கூறியுள்ளதாவது, “பொறுப்புக் கூறல் மற்றும் இழைக்கப்பட்ட போர்க் குற்ற விவகாரங்களை சர்வதேச அளவில் கொண்டு செல்லும் நடவடிக்கையை எமது கட்சி முன்னெடுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஞா-18.101)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சங்கீத பாட ஆசிரியை
திருமதி மகாலஷ்மி ஜெயநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
**தனேஸ்வரி முத்துக்குமாரு**

மண் மகிழ 20.09.1938 — கண் நெகிழ 14.12.2019

அவர்களின் மறைவிற்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்
நலன்புரிச் சங்கம். யா/ இணுவில் மத்திய கல்லூரி (1501)

## தவறவிடப்பட்டுள்ளது

NPXB *9401* இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு ஒன்று வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதை கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C-8552)

**0773934622**


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 112 3471
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## யா/ மகாஜன கல்லூரி, தெல்லிப்பளை
## சிற்றுண்டிச்சாலைக்கான கூறுவிலை கோரல்

எமது கல்லூரியில் 2020 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலையை நடாத்த விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை 16.12.2019 முதல் காலை 9.00 மணி தொடக்கம் 1.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 25.12.2019 காலை 10 மணிக்கு முன்னர் பாடசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும்.

(C-8550) பாடசாலை அபிவிருத்திக் குழு

# நல்லாசான் விருது கௌரவிப்பு நிகழ்வு

(c-8549)



## திரு. இராமசாமி முருகமூர்த்தி (B.Sc, PGDE)

யாழ்.இந்து மகளிர் கல்லூரி
விசாலாட்சி மண்டபத்தில் 16.12.2019 இன்று
நடைபெறவுள்ள கௌரவிப்பு விழாவில்
மாகாணமட்ட “குரு பிரதீபா பிரபா”
விருதினைப் பெறும் எமது கல்லூரியின் கணித
ஆசான் திரு. இராமசாமி முருகமூர்த்தி
அவர்களும் கௌரவிப்பு பெறுவதை
இட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி**

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 04 - 1947



இறப்பு 13 - 12 - 2019

## திருமதி பொன்மலர் நவரட்ணம்

யாழ்.மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்மலர் நவரட்ணம் அவர்கள் 13.12.2019 வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், பாஸ்கரன், பூமிநாதன், மைசூர்நாதன், மகாலட்சுமி, செந்தில்நாதன், சிறீதரன், நவகாந்தன், தர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரட்ணம், மங்களம், தங்கச்சிப்பிள்ளை, இராசமணி, வைரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானேஸ்வரி, சுதர்சினி, ஸ்ரீவாசுகி, கோபாலகிருஷ்ணன், கமலி, ராஜினி, யாழினி, ஸ்ரீநாத் ஆகியோரின் மாமியாரும், நித்தியராணி, நித்தியலட்சுமி, இந்திரா, சிவராசா, குணராசா, ராஜி, ராஜசேகர், சிவசக்தியபாலன், தேவநாயகி ஆகியோரின் பெரிய தாயாரும், நந்தினி அருட்செல்வம், தவச்செல்வம், கோமதி, நவா, சாரோ, சுபா, ரஞ்சி ஆகியோரின் அன்பு மாமியாரும், சயந்தா, பிருந்தா, அமிர்தா, நவநீதன், எழில்நிலா, அபினேஷ், லதுசான், தனுஷ்கன், தினேஷ், வர்னேஷ், வானகி, சங்கவி, சாகித்தியன், சாதனா, சந்தோஷ், சர்மிலன், யுதர்சினி, அனுமிதன், கௌஷிகன், மதுசூதனன், மஞ்சரி, மாலவன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2019) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (1502)

இல.40, இணுவில் தெற்கு,
இணுவில்

தகவல்:- குடும்பத்தினர்
0772608771, 0768945247

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**லோகதாசன் விஜிதசங்கர்**
(கணனி ஆசிரியரும் NC TEC நிறுவன உரிமையாளரும்)

தோற்றம் 20 - 06 - 1982



மறைவு 16 - 12 - 2018

அன்பின் இலக்கணமாய் – எம்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
வாழ்ந்த எம் செல்வமே
நீ நிரந்தரமாய் உறங்கி
ஆனதோ ஒரு வருடம்

செல்வா நகர்,
கிளிநொச்சி

லோகதாசன்
குடும்பம்

(C-8319)

# வெள்ளைவான் கடத்தல்கள் குறித்து பக்கச்சார்பற்று விசாரணை செய்யுங்கள்

## ஆட்சியாளர்களிடம் ராஜித கோரிக்கை



(கொழும்பு)

**வெள்ளைவான் கடத்தல்கள் குறித்து தகவல்களை வெளிப்படுத்தியவர்களிடத்தில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு முழுமையான விடயங்கள் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். புதிய ஆட்சியாளர்கள் வெள்ளைவான் கடத்தல் விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கும் விசாரணைகள் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தான் தயாராக உள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு சொற்ப நாட்களுக்கு முன்னதாக ராஜித சேனாரட்ன நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வெள்ளைவான் கடத்தல்கள் மற்றும் மனிதப்படுகொலைகள் இடம்பெற்று முதலைகளுக்கு போடப்பட்டமை தொடர்பில் தகவல்களை வெள்ளைவானில் சாரதியாக பணியாற்றியதாக கூறி தம்மை அடையாளப்படுத்திய இருவர் வெளியிட்டிருந்தனர். இந்நிலையில் குறித்த இருவரையும் கைது செய்து குற்றப்புலனாய்வுப்பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களின் கைது தொடர்பில் கருத்து வெளியிட்ட ராஜித சேனாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் ஜனநாயகம் மறுதலிக்கப்பட்ட ஆட்சிக் காலத்தில் வெள்ளைவான் கலாசாரம் அறிமுகமானது.

இந்தக்கலாசாரம் நடைமுறையில் இருந்த காலத்தில் பலர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் முறைப்பாடுகள் உள்ளன. அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோதும் அவை முற்றுப்பெற்றிருக்கவில்லை. மேலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் பலரும் என்னிடத்தில் நேரடியாகவும் முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் தான் குறித்த இருநபர்களும் வெள்ளைவான் கடத்தல்கள் தொடர்பிலான விடயங்களைப் பகிரங்கப்படுத்துவதற்கு முன்வந்திருந்தனர். குறித்த நபர்களிடத்தில் நான் அதற்கான சாட்சிகள் இருக்கின்றவா? என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கேட்டிருந்தேன்.

அந்த இரண்டு நபர்களும் நேரடியாகச் சாட்சியத்தினைக் கொண்டிருப்பதாகவும் மற்றும் சில ஆவணங்களையும் வெளிப்படுத்தியிருந்தனர். இந்நிலையில் தான் வெள்ளைவான் கடத்தல்கள் குறித்த தகவல்களை அவர்கள் மூலமாக நான் பங்கேற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக வெளிப்படுத்தியிருந்தேன்.

மேலும் அவர்கள் தமக்கான பாதுகாப்பை வழங்குமாறும் கோரியிருந்தார்கள். இந்நிலையில் குறித்த விடயம் சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாரிடத்தில் நானே கோரியதோடு உரியவர்களுக்கு பாதுகாப்பை வழங்குமாறும் கோரியிருந்தேன்.

தற்போது அவர்கள் இருவரையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர். அவர்களிடத்தில் உரிய விசாரணைகள் பக்கச்சார்பின்றி முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அனைத்து விடயங்களும் பகிரங்கப்படுத்தப்படுவது அவசியம் என்பதோடு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நான் தயாராகவும் இருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பலவீனப்படுத்த வெள்ளைவான் கடத்தல் நாடகங்கள் அரங்கேற்றம்

❖ தாடி வைத்த இருவர் பற்றியும் அவர்களை அழைத்துவந்தவர் பற்றியும் நாட்டு மக்களுக்கு விரைவில் தெரியவரும்

❖ உண்மைகள் அனைத்தையும் நாம் கண்டறிந்துள்ளோம்

## கமால் திட்டவட்டம்





(பன்னிப்பிட்டிய)

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே அண்மைக்கால சில சம்பவங்கள் இடம்பெற்றதாக பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்தார்.

அந்தவகையில்தான் வெள்ளைவான் கடத்தல் தொடர்பான விடயம் மற்றும் சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பன்னிப்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதித் தேர்தலின் இறுதித் தருணத்தின்போது, முன்னாள் அமைச்சர் ஒருவர் தாடி வைத்த இருவரை அழைத்து வந்து ஊடகச் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இதன்போது, பாரிய தகவல் ஒன்றை அவர்கள் கூறியிருந்தனர்.

அதாவது, வெள்ளை வான் கடத்தல் தொடர்பாகவும் வெள்ளை வானில் கடத்தப்பட்டவர்களை முதலைகளுக்கு இரையாக வழங்குவது தொடர்பாகவும் அவர்கள் தகவல்களை வழங்கியிருந்தார்கள்.

நாம், இந்தப் பதவிக்கு வந்தவுடன் இதுதொடர்பான விசாரணையை ஆரம்பித்தோம். இந்த விசாரணையின் முடிவு விரைவில் மக்களுக்கு தெரியுப்படுத்தப்படும்.

மக்களுக்கு அந்த நாடகத்தை அரங்கேற்றிய இருவர் யார் என்பது தொடர்பாக விரைவில் தெரியவரும். இவர்களைத் தூண்டிவிட்டவர்கள் யார்?. இந்த நாடகத்தை அரங்கேற்ற எவ்வளவு பணம் வழங்கப்பட்டது என்பது உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அம்பலப்படுத்தப்படும்.

அதேபோன்று, சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் குறித்த உண்மைகளும் விரைவில் அம்பலப்படுத்தப்படும். அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பலவீனப்படுத்த வேண்டும் என்ற நோக்கில்தான் இந்த நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இன்று இதன் உண்மைகள் அனைத்தையும் நாம் கண்டறிந்துள்ளோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# பெர்த் பகல் - இரவு டெஸ்ட் போட்டி நியூசிலாந்தை பந்தாடியது ஆஸி



மிட்செல் ஸ்டார்க், நாதன் லயன் அபாரமாக பந்து வீச நியூசிலாந்தை 296 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான பகல்-இரவு பிங்க் பால் டெஸ்ட் பெர்த்தில் நடைபெற்றது. டாஸ் வென்று பேட்டிங் தேர்வு செய்த அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் லாபஸ்சாக்னேயின் (143) சூப்பரான சதத்தால் 416 ரன்கள் குவித்தது. டிராவிஸ் ஹெட் 56 ரன்கள் சேர்த்தார். நியூசிலாந்து அணியில் டிம் சவுத்தி, நீல் வாக்னர் தலா நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பின்னர் நியூசிலாந்து முதல் இன்னிங்சை தொடங்கியது. ராஸ் டெய்லரை (80) தவிர மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க நியூசிலாந்து 166 ரன்னில் சுருண்டது.

250 ரன்கள் முன்னிலை யுடன் அவுஸ்திரேலியா 2-வது இன்னிங்சில் பேட்டிங் செய்தது. முதல் இன்னிங்சில் சதம் அடித்த லாபஸ்சாக்னேவும் (50), தொடக்க வீரர் ஜோ பேர்ன்சும் (53) அரைச் சதம் அடிக்க அவுஸ்திரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 217 ரன்கள் எடுத்த நிலையில் 2-வது இன்னிங்சை டிக்ளேர் செய்தது. நியூசிலாந்து அணி சார்பில் டிம் சவுத்தி 5 விக்கெட்டும், வாக்னர் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஒட்டுமொத்தமாக அவுஸ்திரேலியா 467 ரன்கள் முன்னிலை பெற்றது. இதனால் நியூசிலாந்து அணிக்கு 468 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

468 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் நியூசிலாந்து களம் இறங்கியது. ஸ்டார்க் மற்றும் நாதன் லயன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் நியூசிலாந்து பேட்ஸ்மேன்கள் திணறினர்.

ஜீத் ராவல் 1 ரன்னிலும், டாம் லாதம் 18 ரன்னிலும், கேன் வில்லியம்சன் 14 ரன் னிலும், ராஸ் டெய்லர் 22 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். விக்கெட் கீப்பர் வாட்லிங் மட்டும் தாக்குப்பிடித்து 40 ரன்கள் சேர்த்தார். இறுதியில் நியூசிலாந்து 171 ரன்னில் சுருண்டது.

இதனால் அவுஸ்திரேலியா 196 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஸ்டார்க், நாதன் லயன் தலா நான்கு விக்கெட்டுகளும், பேட் கம்மின்ஸ் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். 9 விக்கெட்டுகள் வீழ்த்திய மிட்செல் ஸ்டார்க் ஆட்டநாயகன் விருதை பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.



இந்தியா–மே.தீவுகள் முதலாவது ஒருநாள் போட்டி

## சாய் கோப், ஹெட்மயர் அசத்தல் சதம் இந்தியாவை கதறவிட்டது மே.தீவுகள்

சென்னை சேப்பாக்கம் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஹெட் மையரின் அதிரடி சதத்தால் இந்தி யாவை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த் தியது வெஸ்ட் இண்டீஸ்.

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி சென்னை சேப்பாக் கம் மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற வெஸ்ட் இன் டீஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் களம் இறங்கிய இந்தியா ரிஷப் பந்த் (71), ஷ்ரேயாஸ் அய்யர் (70), கேதர் ஜாதவ் (40) ஆகியோரின் சிறப்பான ஆட் டத்தால் 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 287 ரன்கள் சேர்த்தது.

பின்னர் 288 ரன்கள் அடித் தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் அணி பேட்டிங் செய்தது. ஷாய் ஹோப், சுனில் அம்பிரிஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். சுனில் அம்பிரிஸ் 9 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஷாய் ஹோப் உடன் ஹிம்ரோன் ஹெட்மையர் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபா ரமான ஆட்டத்தை வெளிப் படுத்தியது. ஷாய் ஹோப் ஒரு பக்கம் நிதானமாக விளையாட மறுபக்கம் ஹெட்மையர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஹெட்மையர் 50 பந்திலும், ஷாய் ஹோப் 92 பந்திலும் அரைச் சதம் அடித்தனர். 50 பந்தில் அரைச்சதம் அடித்த ஹெட்மையர் 85 பந்தில் சதம் அடித்தார். சர்வதேச கிரிக்கெட்டில் ஹெட் மையரின் 5-வது சதம் இது வாகும்.

சதம் அடித்த ஹெட்மையர், 106 பந்தில் 11 பவுண்டரி, 7 சிக்சருடன் 139 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் ஷாய் ஹோப் அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றார். 47-வது ஓவரில் அடுத்தடுத்து சிக்ஸ், பவுண்டரி அடித்து 8-வது சதத்தை பூர்த்தி செய்தார்.


ஹெட்மையர், ஷாய் ஹோப் சதத்தால் வெஸ்ட் இண்டீஸ் 47.5 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 291 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித் தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஷாய் ஹோப் 102 ரன்னுடனும், பூரன் 29 ரன்னுடனும் களத்தில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## மரண அறிவித்தல்



தோற்றம் 04.08.1956 மறைவு 15.12.2019

### கணபதிப்பிள்ளை சந்திரகுமார்

உத்திராவத்தை புலோலி வடகிழக்கு பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சந்திரகுமார் (முன்னாள் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளர்) நேற்று (15.12.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-இராசமணி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற ஜீவராணியின் அன்புக் கணவரும் பவித்திரன், ஜெனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சந்திரலேகா மற்றும் சந்திரராஜா (கனடா), ஜெயக்குமார் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.12.2019) திங்கட்கிழமை உத்திராவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(1503)

தொடர்பு:- 0774386605 077 711 1716

தகவல்:- குடும்பத்தினர்

## பேருந்துகள் அனைத்திலும் ஜனவரி முதலாம் திகதி முதல்

# பயணிகளுக்கான கட்டண விபரத்தை கட்டாயம் காட்சிப்படுத்த வேண்டும்

## வடக்கு வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் அனைத்தும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பின்பற்ற வேண்டும் என்பதுடன், எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் குறித்த விதிகளை கடைப்பிடிக்கத் தவறின் உரிய தண்டனைகள் வழங்கப்படும் என்றும் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க.செவ்வேள் தெரிவித்தார்.

பயணிகள் சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்களால் பின்பற்றப்பட வேண்டிய விடயங்களாவன,

1. காற்றுத்தடை கண்ணாடிச் சிட்டை பிரதியொன்று முற்புறக் கண்ணாடித்திரையின் இடது பக்கத்தில் ஒட்டப்படல் வேண்டும்.

2. சாரதியும், நடத்துநரும் கடமையின் போது கௌரவமான ஆடையை அணிதல் வேண்டும்.

3. நடத்துநர் பயணிகளிடம் இயைபான கட்டணத்தினை அறவிட்டு பயணச்சீட்டொன்றை வழங்குவதுடன் கட்டாயமாக மீதிப் பணம் வழங்கப்படல் வேண்டும்.

4. பேருந்தில் கடமையாற்றுகின்ற சாரதி, நடத்துநர் அதிகார சபையால் வழங்கப்பட்ட தொழில் அடையாள அட்டையை வைத்திருத்தல் வேண்டும்.

5. சாரதியொருவர் தொலைபேசியை பயன்படுத்துதலோ அல்லது பேரூந்தை செலுத்துகையில் சாரதியின் கவனத்தை ஈர்க்கின்ற வேறேதும் கருமத்தை செய்ய முடியாது.

6. சாரதி, நடத்துநர் பேரூந்தில் உள்ள உரத்தொலிப்பானை பெரிய சத்தமாக போடுதலாகாதென்பதுடன் பால் ரீதியில் திசைப்படுத்தப்பட்ட ஏதேனும் பாட்டை அல்லது திரைப்படத்தை ஒலிபரப்ப முடியாது.

7. பயணிகளுக்கான கட்டண விபரம் கட்டாயம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

8. அதிகார சபையால் வழங்கப்படும் பொதுமக்கள் முறைப்பாட்டு தொலைபேசி இலக்கம் பேருந்தின் முன், பின் பக்கங்களில் கட்டாயம்காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

9. மிதிபலகையில் பயணிகள் பயணிக்க தடை செய்யப்பட்டுள்ளது.

10. பேருந்துகளில் பயணிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆசனம் குறித்தொதுக்கப்பட்டு காட்சிப்படுத்தல் வேண்டும்.

11. பயணிகள் போக்குவரத்திற்கு உகந்த தகுதியான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.

மேலும், பின்வரும் ஆவணங்கள் எல்லா நேரங்களிலும் கட்டாயம் பேருந்தில் இருத்தல் வேண்டும்.

I. வழியனுமதிப்பத்திரம்

II. காற்றுத்தடை கண்ணாடிச் சிட்டை

III. பேருந்தின் தகுதிச்சான்றிதழ்

IV. சாரதியின் மருத்துவ சான்றிதழ்

V. மாதாந்த ஓட்டுதல் குறிப்புத் தாள்

VI. அரசிறை உரிமம்

VII. காப்புறுதிச்சான்றிதழ்

VIII. சாரதி அனுமதிப் பத்திரம்

IX. அதிகார சபையால் வழங்கப்பட்ட சாரதி தொழில் அடையாள அட்டை

X. அதிகார சபையால் வழங்கப்பட்ட நடத்துநர் தொழில் அடையாள அட்டை என்பனவாகும்.

எனவே பயணிகள் சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகள் அனைத்தும் மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும்.


குறித்த விடயங்களை 01.01. 2020 ஆம் திகதி முதல் கடைப்பிடிக்கத் தவறும் பட்சத்தில் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்பட்டதற்க்மைய உரிய தண்டனைகள் வழங்கப்படும் என்பதுடன் எதிர்காலத்தில் தங்கள் வழியனுமதிப்பத்திரம் வருடாந்தம் புதுப்பிக்கப்படும் போது தங்கள் குற்றச்செயல்கள் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கை மின்சார சபையில் 8000 கோடி ரூபாய் நட்டம்

## அமைச்சர் அமரவீர அதிர்ச்சி

(கண்டி)

இந்த வருடம் இலங்கை மின்சார சபையில் 8000 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதென மின்சக்தி அமைச்சர் மகிந்த அமரவீர அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.



கண்டியில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நட்டத்தில் இயங்கும் 19 இற்கும் அதிகமான அரச நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## 26 நாட்களுக்குள்

# 13 ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்து 26 நாட்களில் 13 ஊடகவியளார்கள் தாக்கப்பட்டுள்ளார்கள் என்று இலங்கையின் சமூக வலைப்பின்னல் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் தலைவர் நுவான் நிரோதா தெரிவித்தார்.


இதன்படி பார்த்தால் , இரண்டு நாட்களுக்கு ஒரு பத்திரிகையாளர் துன்புறுத்தப்படுகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த 26 நாட்களில் பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பத்திரிகையாளர் தமன் என்பவரும் துன்புறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மரண அறிவித்தல்

### அமரர் செல்லையா குமாரசிவம்



பிறப்பு 1933.11.28 இறப்பு 2019.12.13

நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராய் தெற்கில் வசித்து வந்தவருமாகிய செல்லையா குமாரசிவம் கடந்த (13.12.2019) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் ஞானம் அவர்களின் பாசமிகு கணவரும் வாசுகி, கஜேந்திரா, சுரேந்திரா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, குமாரலிங்கம் மற்றும் செல்வமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.12.2019) இன்று திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காந்தாளம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

T.P: 077 267 1834, 077 328 8791, 021 223 1243

தகவல்: குடும்பத்தினர். (1496)

## ஈர விழியுடன் ஈராண்டில்

### திருமதி சரஸ்வதி வீரகத்தி



மண்ணகம் 1940 . 09 . 04

விண்ணகம் 2017 . 12 . 07

வழிமேல் விழி வைத்து
காத்திருப்பாய் அம்மா!
வருவேன் உனைக்கான
விரைந்தோடி அம்மா!
வாயார அழைப்பாயே! அம்மா!
இன்று வெறுமையே! நிஜமாக!!

ஆவரங்கால்

என்றும் உன் நினைவுடன்
மகன் (பபி வீரகத்தி)

(1499)

# அன்ரன் பாலசிங்கத்தின் 13-ம் ஆண்டு நினைவேந்தல்







(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் கொக்குவிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. (படங்கள்:- குப்பிழான் செய்தியாளர்)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் விலங்குகள் வந்தால்

ஒரு யானையைக் கனவில் கண்டால் எந்த உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கும் ஒரு பெரிய மனிதரின் நட்புக் கிடைக்கும். ஆனால் உங்கள் விருப்பப்படி செயற்படமுடியாமல் எதையும் அந்தப் பெரிய மனிதருடைய ஆலோசனைப்படியே செய்ய வேண்டியதிருக்கும். குதிரையைக் கனவில் கண்டால் ஆவலுடன் எதிர்பார்க்கும் அரசாங்க வேலை அல்லது உயர்பதவி விரைவில் கிடைக்கும்.

குதிரைப் பந்தயத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் பெரிய பிரச்சினை ஏற்படும்.

பசுவைக் கனவில் கண்டால் அது போலக் கனவு கண்டவருக்கு விரைவில் ஒரு நிலையான சொத்து கிடைக்கும். மாட்டுத் தொழுவத்தில் இருப்பது போல வும் அப்போது ஒரு மாடு சாதுவாகப் பார்ப் பது போலவும் கனவு கண்டால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். பசு கோபமாகப் பார்ப்பது போலக் கனவு கண்டால் மேல் அதிகாரிகளால் தொல்லை ஏற்படும்.

பசுமாடு முட்ட வருவது போலக் கனவு கண்டால் திடீரென்று விழித்துக் கொண்டால் செய்யும் தொழிலில் தகராறு ஏற்படும். பசு முட்டித்தள்ளி விட்டது போல கனவு கண்டால் அவ்வாறு கனவு கண்டவரது உடல் நலம் கெடும். தொழிலும் நட்டப்படும்.

பூனை, நாய், முயல், ஆடு, கழுதை ஆகியவற்றை கனவில் கண்டால் நல்லது நடக்கும். கழுதையை ஓட்டிக் கொண்டு செல்வது போலக் கனவு கண்டால் சொந்தத் தொழிலில் புகழும் இலாபமும் உண்டாகும்.


# சுகாதார முறைக்கு மாறாக எடுத்துவரப்பட்ட பால் உற்பத்திப்பொருட்கள் அழிப்பு!

(யாழ்ப்பாணம்)

உரிய வெப்பநிலை இன்றி களஞ்சியப்படுத்தி வாகனத்தில் கொண்டுவரப்பட்ட சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பால் உற்பத்தி பொருட்கள் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றின் உத்தரவில் கடந்த வெள்ளிக்கிழமை அழிக்கப்பட்டன.

காரைநகர் பகுதியில் உரிய வெப்ப நிலையின்றி கொண்டு வரப்பட்ட பால் உற்பத்திப் பொருட்களான தயிர், யோக்கட், சீஸ் மற்றும் யோக்கட் குடிபானம் ஆகியவற்றை அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கைப்பற்றியிருந்தார். அந்த உற்பத்திப் பொருட்கள் 3 தொடக்கம் 4°C இல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட வேண்டும். ஆனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசோதனை செய்யும் போது , அவை 14°C க்கும் அதிகமான வெப்ப நிலையில் களஞ்சியப்படுத்தி கொண்டு செல்லப்பட்டது கண்டறியப்பட்டது.

இது குறித்து கடந்த 12 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதார பரிசோதகரால் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு விசாரணையின் போது எதிராளி குற்றத்தை ஒப்புக் கொண்டமையையடுத்து 15 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்த நீதிமன்றம், கைப்பற்றப்பட்ட பால் உற்பத்திப் பொருட்களை அழிக்குமாறு உத்தரவிட்டது.(இ-7)





வடமராட்சி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தால் நேற்று ஏற்பாடு செய்திருந்த மக்கள் நலன் சார்ந்த சிரமதானப் பணியில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட கிராம மக்கள்.

# நீண்டகாலத்தின் பின் வீதி புனரமைப்பு



(பொற்பதி)

நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருந்த வடமராட்சிக் கிழக்கு வாரிவிட்டான் வீதியானது துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக இந்த வீதியானது களிமண் . வீதியாகவே காணப்பட்டது.

மீள் திருத்தம் செய்யப்படாது பராமரிப்பு அற்ற மக்கள் பாவனைக்கு உதவாத வீதியாக இருந்த சுமார் 06 கிலோ மீற்றர் நீளமான வீதி கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டம் கட்டமாக தார் வீதியாக மாற்றப்பட்டு தற்போது சுமார் 04 கிலோ மீற்றர் வீதியும் 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முழுமையாக தார் வீதியாக மாற்றம் செய்யப்படுகின்றது. இந்த வீதி வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி நாவலடிச் சந்தியிலிருந்து உடுத்துறை பிள்ளையார் ஆலயச் சந்தி வரை நீண்டு செல்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-64)

# சடலத்தை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆண் ஒருவர் கடந்த 17.11.2019 அன்று விடுதி இலக்கம் 07 இல் அனுமதிக்கப்பட்டு 21.11.2019 அன்று இறந்துள்ளார். இவருடைய பெயர் மு.தர்மலிங்கம், வயது 72, முகவரி கொடுக்கப்படவில்லை. இவரது சடலத்தை எவரும் உரிமை கோராத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த சடலத்திற்கு உரித்துடையவர்கள் அடையாளம் காட்டி 07 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
உத்தராடம்

ராகு | சந் | சனி,கேது குரு, சுக் | சூரி புத | செவ்

**16.12.2019**

கார்த்திகை 30, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு
சதுர்த்தி காலை 7.12 மணிவரை
பஞ்சமி பின்னிரவு 5.11 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 4.30மணிவரை
சுபநேரம் 12.22-1.52 மணிவரை
இராகுகாலம் 7.52-9.22 மணிவரை
ஐந்தாம் கார்த்திகைத் திங்கள்

வளவன்

**மேடம்**: மற்றவர்கள் வாங்கிய பொருட்களைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழிநிலை உருவாகம், அரசு வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்**: உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**: கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், போசன சுகமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்**: திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**கன்னி**: பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்**: பொது வாழ்வில் புகழ் கூடும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்**: வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**தனுசு**: பயணத்தால் மன உழைச்சல் ஏற்படலாம், பிரயாண பயம் உண்டு, ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம்.

**மகரம்**: சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்நாள், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்**: உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்**: தாழ்ந்த சுபாவமுண்டு, பெற்றோர் மீதான பாசம் கூடும், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், அரை குறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள்.

### நாட்டில் முடங்கியிருந்த

# அபிவிருத்திகள் அனைத்தும் மீளப் புத்துயிர் பெறும்

### முதலீட்டாளர்களுக்கு பிரதமர் மகிந்த அழைப்பு



(தங்காலை)

**நாட்டில் முடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தனது முன்னைய ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் கடந்த ஐ.தே.க. அரசாங்கத்தால் கைவிடப்பட்டதாகக் கூறிய மகிந்த, தடைப்பட்ட அந்த அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

தங்காலை வனவாச விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வழிபாடுகளில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)


## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல:- J/DS/BR/472

*மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2019 ஆம் ஆண்டு முன்பும் 31.05.2019 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2020) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2020 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.*

*குறிப்பு:- 2019 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.*

இல.370,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
021 490 0311

இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5046

(C-8541)


### குண்டுத் தாக்குதலின் பின்னர்

## கூகுளில் அதிகம் தேடப்பட்ட இலங்கை

(வோஷிங்டன்)

கூகுளில் இந்த வருடம் அதிகம் தேடப்பட்ட சொல் "இலங்கை" என அமெரிக்காவில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலம் தெரிய வந்தது.

"Published of Google Trends" என்ற இந்த ஆய்வுக்கமைய இலங்கை எங்கே உள்ளது என அதிகம் தேடப்பட்டுள்ளதாகவும் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து இவ்வாறு இலங்கை தொடர்பிலான தேடல்கள் அதிகம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் இடம்பெற்ற குண்டுத் தாக்கதலின் பின்னரே இந்தத் தேடல் அதிகரித்ததென்றும் அந்த ஆய்வு மேலும் தெரிவித்தது. (இ-7)


# 75 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## வல்லிபுரம் கற்கண்டு



முத்தமிழ்தனை உட்கொண்டு
வாழ்த்திடும்
கலைமாமணி கற்கண்டு
நடிப்பினில் உன் திறன் கண்டு
பார்போற்றுதே வாழிய பல்லாண்டு
உன் பேச்சினில் இனித்திடும் கல்கண்டு
உனைப் பாடிட முடியுமா சொற்கொண்டு
கலைகள் யாவும் தம் கரங்கொண்டு
உனை வாழ்த்துமே வாழ்க நீ நூறாண்டு

இன்று பவளவிழாக்காணும்
எமதருமை நண்பன்
கலாபூஷணம்,
கலைஞானச்சுடர்
கலைமாமணி வல்லிபுரம்
கற்கண்டு அவர்களுக்கு
இனிய பிறந்தநாள்
வாழ்த்துக்கள்

கலையுலக
நண்பர்கள்

(1490)



## யாழ்ப்பாணம் மாநகர சபை

**செங்குந்தாசந்தை, சந்தை வளாகத்தில் அமைந்துள்ள இறைச்சிக்கடைகள் கருவாட்டுக்கடை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

### கேள்வி அறிவித்தல் - 2020 (01.01.2020 - 31.12.2020)

யாழ்ப்பாணம் மாநகர சபையினால் இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தை, இறைச்சிக் கடைகள், கருவாட்டு கடை என்பன 01.01.2020 - 31.12.2020 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

- கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 500.00 (வரிநீங்கலாக)
- கேள்விப் படிவம் விநியோகித்தல் - 16.12.2019 - 30.12.2019 மு.ப. 10.00 மணிவரை
(30.12.2019 தவிர்ந்த ஏனைய அலுவலகநாட்களில் மு.ப.9.00 - பி.ப. 3.00 மணிவரை)
- கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 30.12.2019 மு.ப. 10.30 மணிவரை
- கேள்வி திறத்தல் - 30.12.2019 மு.ப. 11.00 மணிக்கு

| தொ. இல | கடைவிபரம் | விஸ்தீரணம் | மீளளிக்கக்கூடிய கேள்விபிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை (வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | செங்குந்தாசந்தை (வாகனத் தரிப்பிடநிலையம்,கீழ்த்தளத்தில் அமைந்துள்ளமலசல கூடங்களைசுத்திகரித்துபராமரிக்கும் சேவைஉட்பட) | | 10,000.00 | 4,525,000.00 |
| 2 | ஆட்டிறைச்சிக்கடை (இல-06) | 9'9"x 7'7" | 5,000.00 | 400,000.00 |
| 3 | ஆட்டிறைச்சிக்கடை (இல-05) | 6'5"x 7'7" | 5,000.00 | 350,000.00 |
| 4 | கோழி இறைச்சிக்கடை (இல-04) | 6'5"x 7'7" | 5,000.00 | 250,000.00 |
| 5 | கோழி இறைச்சிக்கடை (இல-03) | 6'5"x 7'7" | 5,000.00 | 250,000.00 |
| 6 | கோழி இறைச்சிக்கடை (இல-02) | 5'6"x 7'7" | 5,000.00 | 225,000.00 |
| 7 | கருவாட்டுக்கடை (இல-01) | 5'6"x 7'7" | 5,000.00 | 150,000.00 |

**கேள்வி நிபந்தனைகள், குத்தகை நிபந்தனைகள், மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் கேள்விப் படிவத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.**

(C-8545)

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# சிறுமியின் உயிரிழப்புக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும்

## ஸ்ரீநேசன் வலியுறுத்து



(ஏறாவூர்)

சிறுமியின் உயிரிழப்புக்குக் காரணமான அனைவரும் தண்டிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கவனக் குறைவால் சிறுமி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நான் அறிந்த வரையில் மருந்தின் அளவு 2 மில்லி லீற்றர் ஏற்றப்படுவதற்கு பதிலாக 20 மில்லி லீற்றர் குறித்த சிறுமிக்கு ஏற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வைத்தியர் அதனை குறித்த விதமும், மருந்தினை ஏற்றியவரின் கவனக் குறைவும் உயிரிழப்புக்கான காரணமாக அமைத்திருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உயிரானது மிகவும் பெறுமதியானது. அதனைப் பாதுகாப்பது கட்டாயமானது. இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் தவறு செய்பவர்கள் மருத்துவராக இருந்தாலும் சரி, அரசியல்வாதியாக இருந்தாலும் சரி சட்டத்தின் முன் யாவரும்சமமானவர்கள் என்ற தத்துவத்தின் அடிப்படையில் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் ஊடக சந்திப்பை மேற்கொண்டதை நானும் அவதானித்தேன். இது தொடர்பான முறைப்பாடு சுகாதார அமைச்சிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. நானும் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பாக வினவிய போது அந்த தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்கின்றது.

இந்த உயிரிழப்பு வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. வைத்தியரின் தவறு காரணமாகத்தான் அந்தச் சிறுமி கொல்லப்பட்டிருக்கின்றார் என்பது வெளியாகியுள்ளது.

பல தடவைகள் இவ்வாறான செயற்பாடுகள் வைத்தியர், தாதியர்கள் கவனக் குறைவு காரணமாக இடம்பெற்றிருக்கின்றன.

இந்தமுறை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகவே அது தொடர்பாக சம்மந்தப்பட்ட அமைச்சுக்களிடம் நாம் முறைப்பாடு செய்வோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 14 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

# வைத்தியர் உட்பட மூவர் பிணையில் விடுவிப்பு!

(ஏறாவூர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 14 வயது சிறுமிக்கு அதிக மருந்தை வழங்கியதால் சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பெண்தாதியர், மருந்தாளர் மற்றும் வைத்தியர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த காங்கேயனோடை பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய உவைஸ் பாத்திமா ஜப்றா என்ற சிறுமிக்கு அதிக மருந்தை வழங்கியதால் கடந்த 9ஆம் திகதி அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த சிறுமியின் பெற்றோர் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்தமையை தொடர்ந்து அந்த சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்களை கைது செய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஐ.எம். றிஸ்வான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் சந்தேக நபர்களான 2ஆம், 3ஆம் எதிரிகளான பெண் தாதியர், மருந்தாளர், ஆகிய இருவரையும் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியதுடன் சந்தேக நபரான வைத்தியர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் முன்னிலையானார்.

இதனையடுத்து இந்த வழக்கை நீதவான் சிலமணிநேரம் ஒத்தி வைத்தார்.

பின்னர் பிற்பகல் மீண்டும் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இவர்களை பிணையில் விடுவிக்குமாறு சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான விஜயகுமார், மரியசுலோசன் ஆகியோர் நீதிமன்றில் கேட்டுக் கொண்ட நிலையில் நீதவான், இந்த வைத்தியசாலையில் 9 வயது சிறுவன் இரத்தம் மாற்றி ஏற்றி உயிரிழந்த சம்பவம், சிசு உயிரிழந்த சம்பவம் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக அண்மைக்காலமாக இடம்பெற்று வருவதை சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அந்தக் கால பகுதியில் இன்னும் ஒரு சிசு உயிரிழந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் ஊடகங்கள் முந்திக் கொண்டதால் இவ்வாறான சம்பவங்கள் வெளிவந்துள்ளது என நீதவான் சுட்டிக்காட்டி மீண்டும் வழக்கை ஒத்திவைத்தார்.

மீண்டும் மாலை 5.30 மணிக்கு வழக்கு எடுக்கப்பட்டு இவ்வாறான சம்பவம் இனி வைத்தியசாலையில் இடம்பெறக் கூடாது என சுட்டிக்காட்டி பல எச்சரிக்கையின் மத்தியில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு சந்தேக நபர்கள் இழப்பீடு வழங்குவதாக ஏற்றுக் கொண்டதையடுத்து சந்தேக நபர்கள் 3 பேரையும் எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு தலா ஒருவருக்கு 5 இலட்சம்ரூபாய்கொண்ட இரண்டு பேர் கொண்ட சரீரப் பிணையில் விடுவித்தார். (இ-7)

# மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களுடன் ஹற்றனில் நேற்று சர்வதேச தேயிலை தினம்







(ஹற்றன்)

மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்களுடன் 14 ஆவது சர்வதேச தேயிலை தினம் ஹற்றனில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மலையக மக்களின் வாழ்வினை பிரதிபலிக்கும் கலை கலாசார விழுமியங்கள் உள்ளடங்கிய ஊர்வலம், 'மலையக மக்கள் மாண்பினை உறுதிப்படுத்துவோம்' எனும் தொனிப் பொருளில் இடம்பெற்றது.

இந்த ஊர்வலம் ஹற்றன் மல்லினைப்பூ சந்தியில் ஆரம்பித்து ஹற்றன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபம் வரை சென்றது. ஊர்வலத்தில் பாரம்பரிய கலைகளான தப்பாட்டம், கும்மியாட்டம், காவடி உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஊர்வலத்தில் சென்றவர்கள் 'வீட்டு வேலைக்கு பிள்ளைகளா?' 'வீட்டுடன் விவசாயக் காணி கொடு' போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளையும் காட்சிப்படுத்தியவாறு ஊர்வலத்தில் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து ஹற்றன் டி.கே.டபிள்யூ மண்டபத்தில் மலையக மக்களின் வரலாற்றில் அவர்களின் வாழ்க்கையிலே பெருமை சேர்க்கின்ற வெற்றி நாளாகவும், ஒரு எழுச்சி நாளாகவும் கொண்டாடப்பட்டது.

இதன்போது மலையக மக்களை கௌரவிக்கும் நிகழ்வுகளும், கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் போராட்டத்தில் உயிர்நீத்த முல்லோயா கோவிந்தன், சிவனு லட்சுமணன் ஆகியோரும் நினைவு கூரப்பட்டனர்.

மலையக மக்களின் மாண்பை உறுதிப்படுத்துவோம் அமைப்பு மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் மலையகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினரும் கலந்து கொண்டனர். (இ-7)

# சாதனையாளர்கள் கௌரவிப்பு



(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான **youth with Talent** வேலைத்திட்டத்தில் போட்டியிட்டு தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினைப்பெற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துத்தந்த கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கள்ளப்பாடு தெற்கு கிராமத்தின் உதயம் இளைஞர் கழகத்தினரின் "இயற்கை உரம் தயாரித்தல் வேலைத்திட்டத்தினை" முன்னெடுக்க உழைத்த இளைஞர் யுவதிகள் சுமார் நாற்பத்தைந்து பேரும், இவர்களுக்கான அறிவுரைகள் வழங்கிய பிரதேச செயலாளர் உள்ளடங்களாக அதிகாரிகளுக்குமான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவில் நடத்தப்பட்டது.

வரையறுக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கூட்டுறவு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு சங்கத்தின் தலைவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பணிப்பாளருமான திருமதி சறோஜா குகனேசதாசன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், முன்னாள் மேலதிக மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிர்வாகப்பிரிவு பிரதிப்பணிப்பாளர் எம்.பி.சரத் சந்திரபால மற்றும் தேசிய இளைஞர் கூட்டுறவு மற்றும் வியாபாரப் பிரிவு உதவிப் பணிப்பாளர் லால் ஹேமந்த, பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-281)

# பாரதத்தின் மகிமைவாய்ந்த

# 12 ஜோதிலிங்க தரிசனம்

## கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இம்மாதம் 20,21,22 ஆம் திகதிகளில்




பாரதத்தின் வெவ்வேறு மாநிலங்களிலுள்ள மிகவும் மகிமைவாய்ந்த பன்னிரு ஜோதிலிங்கங்களை ஒரேயிடத்தில் தரிசிக்கும் பாக்கியம் கிளிநொச்சி வாழ் மக்களுக்குக் கிட்டியுள்ளது. அத்துடன் அனைத்துப் பிரச்சினைகளையும் வெல்லும் வகையில் ஆன்மீகக் கண்ணைத் திறக்கவல்ல பட விளக்கக் கண்காட்சி, மனச்சுமையை இறைவனிடம் கொடுப்பதற்கான ஆன்மீக யாககுண்டம், இறைவனுடன் நெருக்கமான அனுபவத்தைப் பெறுவதற்கான தியானம் போன்றவற்றை மக்கள் முற்றிலும் இலவசமாக அனுபவம் செய் யலாம். ஏராளமான ஆன்மீன நூல்களும் தியான பாடல் இறுவெட்டுகளும் விற்பனை செய்யப்பட வுள்ளன. இந்நிகழ்வானது கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபம், பொதுச்சந்தை முன்பாக கண்டி வீதி கிளிநொச்சியில் இம்மாதம் 20, 21, 22 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது. இந்நாட்களில் மக்கள் பன் னிரு ஜோதிலிங்கங்களைத் தரிசித்தருள் பெறலாம்.

### பாரதத்தின் மகிமைவாய்ந்த 12 ஜோதிலிங்க தரிசனம்

பொதுவாக பாரதத்தைப் பொறுத்தவரையில் பன்னிரு ஜோதிலிங்கங்கள் போற்றப்பட்டு வருகின்றன. முதலாவது ஜோதிலிங்கம் குஜராத்திலுள்ள சோமநாதர் ஆகும். சிவன் அழியாத ஞானம் என்னும் அமிர்தத்தைக் கொடுத்து மனித ஆத்மாக்களைத் தெய்வீகக் குணங்கள் நிறைந்த தேவர்களாக்கி சுவர்க்க வாழ்வு கொடுத்ததையே இது குறிக்கின்றது. இரண்டாவது ஜோதிலிங்கம் ஆந்திரா மாநிலத்தில் உள்ள மல்லிகார்ஜுன் ஆகும். இது அவர் ஆத்மாக்களை மாயையை வென்ற அர்ஜுனர்களாக ஆக்கிய பெருமையைக் கூறுகின் றது. மூன்றாவது ஜோதிலிங்கம் மத்தியப் பிரதேசத் தில் உஜ்ஜயினி நகரத்தில் வீற்றிருக்கும் மகாகா லேஸ்வரர் ஆவார். அவர் எமக்கு வரும் தீமை களை அழிப்பவர் ஆவார். அடுத்தது மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஓங்காரேஸ்வரர் சத்தியத்தை வெளிப்படுத்துபவராக உள்ளார். இமயமலையிலே வீற்றிருக்கும் கேதாரநாதர் மனிதர்களைத் தேவர்களாக்கிச் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ வைப்பவர். மகாராஷ்டிராவில் உள்ள பீமாசங்கர் எம்மில் உள்ள துர்க்குணங்களைத் தகர்த்தெறிவதற்குரிய சக்தியைக் கொடுப்பவர். மகாராஷ் டிராவில் உள்ள கிருஷ்ணேஸ்வரர் மனிதர்கள் தங் களை மறந்து உலகாய விடயங்களில் மூழ்கிப் பல வீனமடைந்திருக்கும் பொழுது மீண்டும் ஆத்ம தீபம் ஏற்றி வாழ்வு கொடுப்பவர். இராமேஸ்வரத்திலுள்ள ஜோதிலிங்கமானவர் தேவர்க்கும் மூவர்க்கும் தந்தையாக விளங்குபவர். குஜராத்திலுள்ள நாகேஸ்வரர் மனிதனைத் தன்னுடைய கோரப் பிடியில் வைத்திருக்கின்ற காமம், கோபம், பற்று, பேராசை, அகங்காரம் என்னும் கொடிய விஷத்தை ஆத்மாக்களிலிருந்து அகற்றுபவர். ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள வைத்தியநாதர் ஆத்மாவிலுள்ள பயம், சந்தேகம், பொறாமை, கவலை, மனந்தளரல், அறியாமை போன்ற நோய்களைக் குணப்படுத்தவதன் மூலம் மனம், உடல், பொருள், உறவுகள் சதா சுபீட்சமாக இருக்கும் வாழ்வுக்கு வழிகோலுபவர். மகாராஷ்டிராவில் உள்ள திரியம்பகேஸ்வரர் பிரம்மா, விஷ்ணு, சங்கரரைப் படைக்கும் மும்மூர்த்தி சிவனாக விளங்குகிறார். உத்தரப் பிரதேசத்தில் காசியில் அமைந்துள்ள விஸ்வநாதர் சற்கதியளிப்பவர் எனப் போற்றப்படுகிறார். இப் பன்னிரு ஜோதிலிங்கங்களை ஒரே தலத்தில் தரிசிப்பது பக்த அடியார்களுக்கு மகாபாக்கியமாகும்.

### ஞானக் கண்ணைத் திறக்கவல்ல இராஜயோகப் படவிளக்கக் கண்காட்சி

நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் இழந்த ஆனால் நான் வாழ்வில் வெற்றி பெறத் தேவையான என்னுடைய உண்மையான குணங்களாகிய அன்பு, அமைதி, தூய்மை, சந்தோஷம், கருணை, ஞானம், சக்திகளை நான் மீண்டும் எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம், மேன்மையாக இருக்க நான் செய்ய வேண்டியது என்ன? நாளைய உலகின் நிலை என்ன? என்ற பல கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் வகையில் எவரும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் இராஜயோக படவிளக்கக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### மனக்கவலைகளைக் கையளிப்பதற்கான ஆன்மீக யாக குண்டம்

மனக்கவலைகள் எம்மை அரித்துக் கொண்டிருந்தால் நம்மால் சகஜமாக வாழ்க்கைக்கு முகங் கொடுக்க முடியாதிருக்கும். எங்கள் கவலைகளை இறைவனிடம் கையளித்து சுமை நீங்கி நாங்கள் இலேசானவர்கள் ஆகுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### இறை தியான அனுபவம்

அத்துடன் மக்கள் அமர்ந்திருந்து தியானத்தின் மூலம் அமைதியையும் ஆத்ம சக்தியையும் பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந் நிகழ்வுகள் அனைத்தும் முற்றிலும் இலவசமானது. இன, மத, மொழிபாகுபாடின்றி அனை வரும் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 021 228 3372, 077 452 2637 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்**

# விசேட தேவையுடைய மாணவர்களுக்காக யாழ்.பல்கலை.மாணவர்கள் நிதி திரட்டல்














(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய மாணவர்களுக்காக நிதி திரட்டும் நடவடிக்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டனர்.

நிதி திரட்டும் நோக்குடன் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் CAR WASH நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக முன்றலில் நேற்று நடைபெற்ற இந் நிகழ்விற்கு பல்கலைக்கழக சமூகத்தினர், மாணவர்கள் பொது மக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஆதரவுகளை வழங்கியிருந்தனர். (இ-7)

# வடக்குக்கு தமிழ் ஆளுநர் வேண்டும்

## சிவமோகன் எம்.பி தெரிவிப்பு

(நெளுக்குளம்)

வடமாகாணத்திற்கு மாகாணத்தின் புவியியல் வரலாறு தெரிந்த தமிழரொருவர் ஆளுநராக நியமிக்கப்படவேண்டுமென வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ஆளுநராக நியமிக்கப்படுபவர் தமிழ் மக்களின் வாழ்வியலை பூரணமாக புரிந்து கொண்டவரும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் போதிய அனுபவம் உள்ளவராகவும் உள்ள வட மாகாணத்தை சேர்ந்த ஒரு தமிழர் நியமிக்கப்பட வேண்டும்.

வடமாகாணத்திற்கு ஒரு ஆளுநரை நியமிக்காமல் விடுவது சிங்கள தேசத்தை சேர்ந்த ஒரு இராணுவ அதிகாரியை வட மாகாண ஆளுநராக நியமிப்பதற்கான இழுத்தடிப்பா என்ற சந்தேகம் எழுகின்றது.

அப்படி ஒரு விடயத்தை ஒரு போதும் செய்ய முயற்சிக்க கூடாது. ஆனால் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும்.

எனவே வடக்கு மாகாண ஆளுநர் தெரிவில் தீர்க்கமான தெளிவான முடிவுகளை அரசு எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (9-299)

# அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கக்கோரி தருமபுரத்தில் வீதி மறியல் போராட்டம்



(பரந்தன்)

கிளிநொச்சி பரந்தன் ஏ-35 வீதியின் வெள்ள பாதிப்பை தடுக்கும்வகையில் தருமபுரம் நெத்தலியாற்றுப் பாலத்தினை அகலித்து மீளமைக்குமாறும் வெள்ளத்தினால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்குமாறும் தருமபுரத்தில் உள்ள அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கக் கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நெத்தலியாறு பாலத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் சிறிது நேரம் ஏ35 வீதியின் ஒரு பகுதியையும் மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்

போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு அனுப்ப மகஜர் ஒன்றினையும் தருமபுரம் புனித சவேரியார் ஆலய பங்குத்தந்தை அன்ரனி வின்சன் சில்வஸ்டர் தாஸிடம் கையளித்தனர்.

குறித்த மகஜரில், அரசினால் 1000 பாலத்திட்டத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டு எமது கிராமத்தில் உள்ள ஏ35 வீதியின் நெத்தலி ஆற்றுப் பாலம் புதிதாக கேடர் பாலமாக அமைக்கப்படும் போது எமது கிராமத்தில் வசிக்கும் அனுபவம் வாய்ந்த முதியவர்களும், பொது அமைப்புக்களும் இணைந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்,

எழுத்து மூலம் எமது பகுதி நிலைமைகளை எடுத்துக் கூறிய போதும் எம்து கருத்துக்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை

எமது கிராமத்தின் மேல் பகுதியில் கல்மடுக் குளம் காணப்படுவதால் வருடம் தோறும் வான் பாய்கின்றது இதனால் குறித்த பாலத்தின் தகடு மூலம் வெள்ள நீர் தடைப்பட்டு எமது கிராமத்திற்குள் புகுகிறது.

குறித்த நெத்தலியாறு பாலத்தினை மாற்றி வெள்ளநீர் வடிந்தோடக்கூடிய பாலமாக மாற்றுவதுடன் சிதைவடைந்துள்ள எமது பிரதேச பாலங்களையும் புனரமைக்க வேண்டும். எமது பிரதேசத்தில் உள்ள சுமார் 49.5 கிலோமீற்றர் உடைய உள்ளக வீதிகளையும் கொங்கிரீற் வீதிகளாக மாற்றித் தரவேண்டும்.

அத்துடன் எமது கிராமத்தின் நடுப்பகுதியால் (கண்டா வளைக் கிராமத்திற்கான ) அயற் கிராமத்திற்கான விவசாய வாய்க்கால் செல்கின்றது. மழைகாலத்தில் ஏற்படும் வெள்ளத்தினால் அதனூடாக கிராமத்திற்குள் வெள்ளம் புகுகின்றது எனவே அவ் வாய்க்காலையும் ஆழப்படுத்தி கொங்கிரீற் வாய்க்காலாக மாற்றி தருமாறு மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-312-315-316)




# சமாதானத்திற்கான நடைபவனி



(நெளுக்குளம்)

சமாதானத்தின் வேர்கள் ஆழ ஊடுருவட்டும், புதிய தேசம் ஒன்றை ஒன்றாக சேர்ந்து கட்டியெழுப்புவோம் எனும் தொனிப் பொருளில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்கை ஏற்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகிய தெற்கு நோக்கிய நடை பயணம்நேற்று வவுனியாவில் இருந்து தென்பகுதியை நோக்கிச் சென்றது.

அந் வகையில் வவுனியா கந்தசாமி ஆலயத்தில் பௌத்த மதகுரு ஒருவரின் பௌத்த மத போதனைகள் அடங்கிய வழிபாட்டுடன் அரச மரத்தை வைத்து வழிபட்டு குறித்த அரசமரம் தென்னிலங்கைக்கு ஏற்பாட்டாளர்களால் கொண்டு செல்லப்பட்டது. (9-299)

# வவுனியாவிலும் சுவரோவியங்கள்





(குருமன்காடு)

ஜனாதிபதியின் அழகான இலங்கை என்னும் திட்டத்தின் கீழ் வவுனியாவிலும் சுவரோவியங்கள் வரையும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக நாடளாவிய ரீதியில் இளைஞர்கள் பலர் ஒன்றிணைந்து நகரங்களிலும் அதனைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் இருக்கும் சுவர்களை வண்ணமயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கையில் வவுனியாவில் சிவில் பாதுகாப்பு குழு, பொதுமக்கள், இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தக சங்கத்தினர் இணைந்து சுவரோவியம் வரையும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்த வகையில் வவுனியா காமினி மகா வித்தியாலய சுற்று மதிலில் சிவில் பாதுகாப்பு பிரிவினர் மற்றும் பொதுமக்கள், இளைஞர்கள் இணைந்து சுவரை சுத்தம் செய்து ஓவியங்கள் வரையும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன், வவுனியா பழைய பேருந்து நிலையத்தின் சுவர்களில் வவுனியா வர்த்தக சங்கத்தினருடன் இணைந்து பல்கலைக் கழக மாணவர்கள் ஓவியங்கள் வரையும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (9-250)



வவுனியா சின்னப்புதுக்குளம் இயேசுவின் அற்புத சபையினரால் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு வருடாந்த சிரமதான நிகழ்வு நேற்று முன்தினம் அப் பகுதியில் இடம்பெற்றது. கிறிஸ்மஸ் தினத்தில் சிறப்பு ஆராதனையில் அனைவரையும் கலந்துகொண்டு இறையாசிகளை பெற்றுக்கொள்ளுமாறு இயேசுவின் அற்புத திருச்சபையினர் அழைத்துள்ளனர். (படம்-நெளுக்குளம் செய்தியாளர்)

# வவுனியாவில் உயிரிழந்த நிலையில் யானையும் குட்டியும் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா பறயனாளங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்நாட்டி கணேசபுரம் பகுதியில் யானையும் யானைக் குட்டியும் உருக்குலைந்த நிலையில் இறந்து கிடந்துள்ளதை ஊர்வாசிகள் அவதானித்துள்ளனர்.

கல்நாட்டி பகுதியில் அமைந்துள்ள காணிக்கு நேற்று முன்தினம் காலை விவசாயிகள் சிலர் சென்றிருந்த சமயத்தில் உயிரிழந்த நிலையிலிருந்த யானைகளின் எச்சங்களை கண்டுள்ளனர். இதையடுத்து பறயனாளங்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதுடன் பொலிசார் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கவனத்திற்குக்கொண்டு சென்றனர். சம்பவ இடத்திற்கு சென்று இது குறித்த விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பத்து நாட்களுக்கு முன்னர் குறித்த யானையும் குட்டியும் இறந்திருக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானையின் சில பாகங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (9-299)

# ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பு





(மன்னார்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "மாற்றத்தின் ஆக்க பூர்வமான முகவர்கள்" எனும் தொனிப்பொருளில் மனித உரிமைகளை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், மனித உரிமை செயற்பாட்டாளர்களை அழைப்பதுடன் மனித உரிமைகளுக்கு குரல் கொடுத்து செயல்புட்ட மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் நேற்று முன்தினம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின்(MSEDO) ஏற்பாட்டில் மன்னார் உப்புக்குளம் விருந்தினர் மாளிகையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. குறித்த நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார்,முருகன் கோயில் பிரதம குரு மஹா தர்ம குமார குருக்கள்,மன்னார் மூர்வீதி ஜும்மாப் பள்ளி மௌலவி எஸ்.ஏ.அஸீம், அருட்பணி பத்திநாதன்,மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டதோடு, ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (9-285)

# பளை வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள் அனைவரும் பெரும்பான்மை இனத்தவர்கள்

## மொழிப்பிரச்சினையால் நோயாளர்கள் பெரும் அவதி

(பளை)

பளை பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றும் மூன்று தாதிய உத்தியோகத்தர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதால் மொழிப்பிரச்சினை காரணமாக தமது தேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய பணிமனையின் கீழ் இயங்கும் குறித்த வைத்தியசாலை நாரந்தனை, பனை, எழுதுமட்டுவாள், புலோப்பளை, அல்லிப்பளை, ஆனையிறவு, புதுக்காட்டுச் சந்தி, தாளையடி, வெற்றிலைக் கேணி மற்றும் ஆழியவளைப் பகுதிகளை உள்ளடக்கிய ஒரே ஒரு பிரதேச வைத்தியசாலையாகக் குறித்த வைத்தியசாலை காணப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் தனியார் வைத்தியசாலைகள் ஏதும் இல்லாத நிலையில் நடுத்தர வாழ்க்கைத்தரத்துடன் வாழும் குறித்த பகுதி மக்கள் தமது சுகாதாரத் தேவைகளை இந்த வைத்தியசாலையிலேயே பெற்று வருகின்றனர்.

இங்கு நிரந்தர வைத்தியராக ஒருவர் நியமிக்கப்பட்ட நிலையில் ஒருவர் ஒப்பந்த அடிப்படையிலும் இன்னொரு வைத்தியர் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து சுழற்சி முறையில் சேவையை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இங்கு தாதிய உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் மூன்று தாதியர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதன் காரணமாக மருத்துவச் தேவைகளை பெறச் செல்லும் குறித்த பகுதி மக்கள் தாம் தாதியர்களுடன் இலகுவாகக் கலந்துரையாடிச் சேவையைப் பெற முடியாதுள்ளதாகத் தெரிவித்தனர்.

ஆகவே தமது தேவைகளை குறித்த வைத்தியசாலை மூலம் இலகுவாகப் பெற்றுக் கொள்ள ஏதுவாக கடமை மாற்று அடிப்படையில் தமிழ் தாதிய உத்தியோகத்தரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதிய உத்தியோகத்தர்களில் 142 பேர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் 28 பேர் மட்டும் தமிழ் தாதிய உத்தியோகத்தர்களாகவும் காணப்படுகின்றனர்.

தமிழ் பகுதிகளில் இருந்து தாதிய சேவைக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் மிகக் குறைவாகக் காணப்படுவதால் இவ்வாறான இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (9-10)

## வவுனியா மாணவிக்கு வீடு



(குருமன்காடு)

நீரிழிவு நோயாளர்களின் சர்க்கரையின் அளவையும், குருதியின் வகையையும் பரிசோதிப்பதற்கு தேவையான குருதியைப் பெற்றுக் கொள்ளும் தானியங்கி ரோபோ இயந்திரத்தை கண்டுபிடித்த வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி பு.றோகிதாவை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.

சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு சென்ற வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான தர்மபால செனவிரட்ன, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும், ஜனாதிபதியின் சமூக பாதுகாப்பு "வேலைத்திட்டத்திற்கான இணைப்பாளருமான கேணல் ரட்ணபிரிய பந்து, வெலிஓயா மங்களாராமய விகாராதிபதி கியூலேகெதர மங்கல தேரர், இந்து மதகுரு ரட்ணம் உள்ளிட்ட குழுவினர் பாடசாலை அதிபர் பி.கமலேஸ்வரி, சாதனை மாணவி றோகிதா புஸ்பதேவன் மற்றும் அவரது குடும்பத்தினரை சந்தித்ததுடன் மாணவியை கௌரவித்தனர்.

இதன்போது குறித்த மாணவியின் குடும்பநிலை தொடர்பாக கேட்டறிந்த அவர்கள் சாதனை மாணவி மற்றும் அவரது சகோதரி ஆகியோரின் கல்வி தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும், மாணவி வாடகை வீட்டில் குடியிருப்பதனால் மாணவிக்கு வவுனியாவில் காணி வழங்கி வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக தர்மபால செனவிரட்ன வாக்குறுதியளித்ததுடன், மாணவியின் சாதனை தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார். (9-250)




## செயல்வாத விழிப்புணர்வு நிகழ்வு



(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பினால் "சமத்துவமான தலைமுறை வன்புணர்வுக்கு எதிராய் எழுந்து நிற்போம்" எனும் தொனிப்பொருளில் செயல்வாத விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கானான் தேவாலய மண்டபத்தில் சார்ள்ஸ் தவசிறி மற்றும் சிறி கலைவாணி ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

16 நாட்கள் செயல்வாத விழிப்புணர்வாக ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வின் இறுதி நாளாக இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சமூகத்தில் சிறப்பாக சேவையாற்றிய பெண்கள் ஊக்குவிக்கப்பட்டதுடன், மேற்குறித்த தொனிப்பொருளில் கருத்துக்களும் பரிமாறப்பட்டன. (9-100)

## தீக்காயங்களுக்குள்ளாகிய குடும்பப்பெண் உயிரிழப்பு!

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சிமாயவனூர் பகுதியில் தீக்காயங்களுக்குள்ளாகி குடும்பப் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் யோகம்மா (வயது 45) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் குடும்பத் தகராறில் தனக்குத்தானே குறித்த பெண் தீ மூட்டியுள்ளார். சம்பவத்தை அறிந்த அயலவர்கள் உடனடியாக அவரை மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர். அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர் தெரி வித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பெண்ணின் கணவரை கைது செய்த தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (9-316)

## அழகான வன்னியை உருவாக்குவோம்

### தர்மபால தெரிவிப்பு

(குருமன்காடு)

ஜனாதிபதியின் அழகிய இலங்கை என்னும் வேலைத் திட்டத்தின் கீழ் அழகிய வன்னியை உருவாக்குவோம் என வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினரும், பொதுஜன பெரமுனவின் மாவட்ட அமைப்பாளருமான தர்மபால செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலப்பகுதியில் வன்னியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஜனாதிபதியின் சிந்தனையில் உதித்த அழகிய இலங்கை என்னும் வேலைத்திட்டமானது அழகான வடக்கு என்னும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது. சுவர்களில் பொருத்தமான படங்களை வரைந்து, தேவையற்ற படங்களை பிள்ளைகள் பார்க்க விடாமல் அழிப்போம். படங்களை வரைந்து ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் வன்னியை துப்பரவு செய்து அழகிய வன்னியை உருவாக்குவோம் என மேலும் தெரிவித்தார். (9-250)

## வாசிப்பு மாத பரிசளிப்பு விழா



(நெளுக்குளம்)

வவுனியா நகரசபை மற்றும் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ் ஒன்றும் தவிசாளரால் வெளியீடு செய்து வைக்கப்பட்டதுடன் அதன் முதல் பிரதியை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் றஞ்சன் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பொதுநூலகத்தால் நடத்தபட்ட வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருந்தினர்களால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காஞ்சன, உபநகரபிதா சு.குமாரசாமி, நகரசபை செயலாளர் இ.தயாபரன், வர்த்தக சங்க தலைவர் சுஜன் சண்முகராஜா, நகரசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-299)



கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் உள்ள திருச்சபைகள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நடத்திய நத்தார் இன்னிசை வழிபாடு கடந்த வெள்ளிக்கிழமை இரணைமடு நெலும்பியச மண்டபத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சியில் உள்ள றோமன் கத்தோலிக்க திருச்சபை, பப்ரிஸ் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை உள்ளிட்ட தேவாலயங்களின் நத்தார் பாடகர் குழுவினருடன், இராணுவத்தினரின் பாடகர் குழுவினரும் இணைந்து பாடல்கள் இசைத்ததுடன் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரியவின் ஆலோசனைக்கமைய குறித்த நிகழ்வு இடம்பெற்றது. (படங்கள்:- முறிகண்டி செய்தியாளர்)

## பாரதம்

## நிர்பயா கொலை குற்றவாளிகளை நான் தூக்கிலிடுகிறேன்; இரத்தத்தால் கடிதம் எழுதிய வீராங்கனை வேண்டுகோள்



(டில்லி)

மாணவி நிர்பயாவை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலைசெய்த குற்றவாளிகளை தூக்கிலிட அனுமதிக்க வேண்டும் என சர்வதேச துப்பாக்கி சுடும் வீராங்கனை வர்திகா சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து இரத்தத்தில் கடிதம் எழுதிய அவர், 'நிர்பயா வன்புணர்வுக் குற்றவாளிகளை தூக்கிலிடத் தன்னை அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், தனது முயற்சிக்கு பெண் நடிகைகள், பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்க வேண்டும் என்றும் இதன்மூலம் சமுதாயத்தில் நாம் மாற்றம் கொண்டுவர முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

டில்லியில் கடந்த 2012 டிசெம்பர் 16ஆம் திகதி மருத்துவ பீட மாணவி நிர்பயாவை 6 பேர் கொண்ட குழுவினர் ஓடும் பேருந்தில் பாலியல் துஷ்பிரயோகம் செய்து பேருந்தில் இருந்து தூக்கி வீசினர்.

இதில் படுகாயமடைந்த நிர்பயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி டிசெம்பர் 29ஆம் திகதி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இது தொடர்பான விசாரணைகளில் ராம்சிங், பவன்குப்தா, முகேஷ்சிங், வினய் சர்மா, அக்சய் தாக்கூர் மற்றும் ஒரு சிறுவன் என 6 பேர் கைது செய்யப்பட்டனர். 6 பேரில் 5 பேருக்கு மரண



தண்டனை விதிக்கப்பட்டது.

இதில் முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட ராம்சிங் டில்லி திகார் சிறையில் உயிரிழந்தார்.

அத்துடன் குறித்த சிறுவன் தனது தண்டனைக் காலம் நிறைவடைந்த நிலையில், கடந்த 2015ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். ஏனைய நால்வருக்கும் உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதற்கான நடவடிக்கைகளை டில்லி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## கங்கைக் கரையில் தடுமாறி விழுந்த மோடி



(டில்லி)

கான்பூரில் நமாமி கங்காத் திட்டத்தை பார்வையிடுவதற்காக சென்ற பிரதமர் நரேந்திர மோடி, படிக்கட்டில் ஏறிச் செல்லும் போது தடுமாறி கீழே விழுந்தார். அவரைப் பாதுகாப்பு அதிகாரிகள் மீட்டு அழைத்துச் சென்றனர்.

கங்கை நதியை தூய்மைப் படுத்தும் பணிகளுக்காக உருவாக்கப்பட்ட தேசிய சபையின் ஆலோசனைக் கூட்டம், உத்தரப் பிரதேசம் மாநிலம்- கான்பூரிலுள்ள சந்திரசேகர் ஆசாத் வேளாண் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

இதன்போது நமாமி கங்கா திட்டத்தின் முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள், கங்கை நதியில் படகு பயணம் மேற்கொண்டு ஆய்வு செய்துவிட்டு, மீண்டும் கரைக்கு திரும்பிய பிறகு, பிரதமர் மோடி படிக்கட்டின் மூலம் ஏறிச் செல்ல முற்பட்டார்.

அப்போது யாரும் எதிர்பார்க்காத நிலையில், திடீரென பிரதமர் மோடி படிக்கட்டில் இருந்து தடுமாறி கீழே விழுந்தார். இதைக் கண்ட அருகில் இருந்த அவரது பாதுகாவலர்கள் மோடியைத் தூக்கிவிட்டனர். இந்த சம்பவம் அங்கு சற்று பரபரப்பை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## நேபாளத்தில் பஸ் விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழப்பு, 18 பேர் படுகாயம்

(காத்மண்டு)

நேபாளத்தில் பஸ் கவிழ்ந்த விபத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். மேலும் 18 பேர் படுகாயம் அடைந்தனர்.

நேபாளத்தின் காலின்சவுக் பகுதியில் உள்ள புனித தலத்தில் இருந்து பக்தாபூர் நகருக்கு ஒரு பஸ் சென்று கொண்டிருந்தது. அதில் 40 பேர் பயணம் செய்தனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் சிந்துபால்சவுக் மாவட்டத்தில் உள்ள சுன்கோஷி பகுதியில் இருக்கும் ஆபத்தான வளைவு ஒன்றில் பஸ் திரும்பியது. அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் அருகிலுள்ள பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்



குள்ளானது.

இந்த விபத்தில் சிக்கி 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்தில் சிக்கியவர்களை அப்பகுதி மக்கள் உடனடியாக மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் 18 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதுதொடர்பாக, பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஜ-2)

## இரு ஆண்டுகள... தரப்பு வர்த்...

### சீனா மீதான 15 சதவீத வரிவிதிப்பை...

(வோஷிங்டன்)

**சீனாவுடனான வர்த்தகப் போரை நிறுத்தி ... அமுலாக இருந்த 15 சதவீத வரிவிதிப்பை இ... வெளியிட்டது.**

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே சுமார் 2 ஆண்டுகளாக வர்த்தகப் போர் நடந்து வந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சீனா நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளைப் பின்பற்றி வருவதாகவும் அமெரிக்காவின் அறிவுசார் சொத்துக்களையும், தொழில்நுட்பங்களையும் திருடி வருவதாகவும் குற்றம்சாட்டி, இரு தரப்பு வர்த்தகப் போரைத் தொடங்கினார். அவர் அமெரிக்காவில் சீனப் பொருட்களுக்கு கூடுதல் வரிகளை விதித்தார்.

ஆனால் சீன ஜனாதிபதி ஜின்பிங், ட்ரம்பின் குற்றச்சாட்டை நிராகரித்தார்.

அது மட்டுமின்றி அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்கிற வகையில், சீனாவில் அமெரிக்க பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்தார். இரு நாடுகளும் மாறி மாறி வரிகளை உயர்த்தி வந்தன.

இந்த வர்த்தக போர், உலகளாவிய பொருளாதார மந்த நிலைக்கு ஒரு காரணமாகவும் கூறப்பட்டது.




இருப்பினும் இந்த வர்த்தகப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன. இதையொட்டி இரு தரப்பு அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் முதல் கட்ட ஒப்பந்தம் இரு நாடுகள் இடையே ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று 15ஆம் திகதி அமுலுக்கு

## சர்வதேச சட்ட... ஈரான் மீது இ... பொருளாதாரத்...

### மலேசியப் பிரதமர் குற்றச்சாட்டு

(கோலாலம்பூர்)

சர்வதேச சட்டங்களை மீறி ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருப்பதாக மலேசிய பிரதமர் மகதீர் மொஹமட் குற்றஞ்சாட்டினார்.

உள்நாட்டுப் போர் நடைபெறும் ஏமனில் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் ஆயுதக் கடத்தலுக்கு உதவியதாக ஈரானின் மிகப்பெரிய விமான நிறுவனமான மகான் மீதும் ஈரானின் கப்பல் நிறுவனம் மீதும் அமெரிக்கா புதிய பொருளாதாரத் தடையை விதித்தது.

இந் நிலையில் கட்டாரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த நிகழ்வொன்றின் போது இதுகுறித்து மலேசியப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஈரான் மீது ஒருதலைப்பட்சமாக அமெரிக்கா தடை விதித்து வருவதை நான் ஆதரிக்கவில்லை. ஈரான் மீது அமெரிக்கா விதிக்கும் பொருளாதாரத் தடை சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சாசனத்தை மீறுவதாக உள்ளது" என விமர்சித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, சீனா 6 வளர்ந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015இல் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி ஆக்கபூர்வத் தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் அந்நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு

# வெளிநாடு

## ளாக நீடித்து வந்த
## த்தகப்போர் நிறுத்தம்
### பயும் இரத்து செய்த அமரிக்கா

வைத்து, நேற்று ஞாயிற்றுக் கிழமை
இரத்து செய்து அமெரிக்கா அறிவிப்பு



வரவிருந்த சீனப் பொருட்கள் மீதான 15 சதவீத அமெரிக்க வரி விதிப்பு இரத்தாகி பது.

இரண்டாம் கட்ட ஒப்பந்தம் ஏற்படுத் துவது தொடர்பான பேச்சு வார்த்தையை, அடுத்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிகின்ற வரையில் காத்திருக்காமல் உடனடியாக தொடங்கு வோம் என ட்ரம்ப் அறிவித்தார்.


இப்போது சீனப் பொருட்கள் மீதான 15 சதவீத வரி விதிப்பு இரத்து ஆகாமல் இருந்திருந் தால், கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் அமெரிக்க மக்கள் சீன ஆடைகள், ஸ்மார்ட் போன்கள், பொம்மைகள் போன்றவற்றை கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டியிருந்திருக்கும்.

அமெரிக்காவின் நடவடிக் கையில் திருப்தி அடைந்துள்ள சீனா, அமெரிக்காவில் இருந்து கூடுதல் அளவு சோயாபீன், பால் பொருட்கள், பிற விவசாயப் பொரு ட்களை வாங்க முன்வந்தது.

இது தொடர்பாக அமெரிக்க பண்ணை பணியக கூட்டமை ப்பின் தலைவர் ஜிப்பி டுவால் கூறும்போது, "இரு தரப்பு மோதல் ஏற்படுவதற்கு முன்பாக சீனா தான் அமெரிக்காவின் இரண்டா வது பெரிய விவசாய சந்தையாக இருந்தது. இப்போது 5-வது இடத் துக்கு சரிந்து விட்டது.

இப்போது மீண்டும் சீன வர்த் தகத்துக்கான கதவை திறந்திரு ப்பதால் பழைய நிலைக்கு திரு ம்ப வழி வகுத்துள்ளது" எனக் குறிப்பிட்டார். (ஜ-2)

## டங்களை மீறி
## அமெரிக்கா
## ந் தடைவிதிப்பு



வைத்துக்கொள்ளலாம், எந்த அளவுக்கு அதைச் செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ள தாகக் கூறி அதிலிருந்து விலகினார்.

மேலும் ஈரான் மீது தொடர்ந்தும் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறார். இதற்குப் பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறி வருவதால் அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் போக்கு தொடர்கின்றமை குறிப்பிடத் தக்கது. (ஜ-2)

## பிரான்ஸில் தொடரும் போராட்டம்!
### கைவிடுமாறு ரயில்வே நிர்வாகம் கோரிக்கை

(பரீஸ்)

பிரான்ஸில், அரசின் ஓய்வூதி யத் திட்ட சீர்திருத்தத்தை எதிர்த்து முன்னெடுக்கப்பட்டுவரும் போரா ட்டத்தை கிறிஸ்மஸ் பண்டிகை விடுமுறை நாட்களை முன்னி ட்டு இடைநிறுத்தம் செய்யுமாறு தேசிய ரயில்வே நிர்வாகம் தங் களது ஊழியர்களுக்கு அழைப்பு விடுத்தது.

குறித்த போராட்டத்தினால் பிரான்ஸில் 85 வீத போக்கு வரத்துக்கள் தடைப்பட்டுள்ள நிலையில், பொதுமக்களின் நலன் கருதி தேசிய ரயில்வே நிறுவன தலைவர் ஜீன் பியரே ஃ பரண்டாவ், இந்த கோரிக் கையை முன்வைத்தார்.

இது குறித்து மேலும் கூறு கையில், 'விடுமுறை தினங்கள் குடும்பத்தாரை சந்திப்பதற்கு முக்கியமான தருணமாகும். கிறிஸ்மஸ் பண்டிகை எதிர்வரும் 25ஆம் திகதி உலகம் முழு வதும் கொண்டாடப்படுகிறது.




பண்டிகையைக் கொண்டாடவும் தங்களது குடும்பத்தாருடன் மகி ழ்ச்சியாக இருக்கவும் பொதுமக் கள் விரும்புவர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் ரயிலில் பயணம் செய்வார்கள். அதனால் தான் கிறிஸ்மஸ் பண்டிகை விடுமுறைக் காலங்களில் போராட்டத்தை இடைநிறுத்தி வைக்குமாறு ரயில்வே ஊழியர்களுக்கு அழை ப்பு விடுக்கிறேன்' என கூறினார்.

பிரான்ஸில் அரசின் ஓய்வூதி யத் திட்ட சீர்திருத்தத்தை எதிர்த்து தேசிய ரீதியில் வேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்களை முன் னெடுக்க தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்ததற்கு அமைய, கடந்த 5 ஆம் திகதி பிரான்ஸின் பல்வேறு இடங்களில் போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## உலக அழகிப்பட்டம் வென்றார்
### ஜமைக்கா பெண் டோனி ஆன்சிங்




(கிங்ஸ்ரன்)

உலக அழகிக்கான மகுட த்தினை ஜமைக்காவைச் சேர்ந்த டோனி ஆன்சிங் சூடினார்.

69 ஆவது உலக அழகிப் போட்டி கிழக்கு லண்டனில் உள்ள எக்செல் மையத்தில் கடந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பமானது.

111 நாடுகளைச் சேர்ந்த அழ கிகள் பங்கேற்றதில், பல்வேறு போட்டிகளுக்குப் பின் 40 பேர் வரிசைப்படுத்தப்பட்டனர்.

உலக அழகி யார் என்பதைத் தெரிவு செய்வதற்கான போட்டி நேற்று முன்தினமிரவு சனிக் கிழமை நடைபெற்றது.

இதில் ஜமைக்கா, பிரான்ஸ், இந்தியா, பிரேசில், நைஜீரியா அழகிகள் இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றனர். இறுதிச் சுற்றில் ஜமைக்கா இளம்பெண் டோனி-ஆன்சிங் உலக அழகியாகத் தேர்வுசெய்யப்பட்டதாக அறிவி க்கப்பட்டார்.

பிரான்சின் ஒபெலி மெசினா இரண்டாம் இடத்தையும், இந் திய அழகி சுமன்ராவ் மூன் றாம் இடத்தையும் கைப்பற்றி னார். (ஜ-2)

## ஒரேநேரத்தில் 3 சூரியன்கள்
### சீனாவில் அதிசயம்

(பீஜிங்)

சீனாவின் கோர்காஸ் நகரில் ஒரே நேரத்தில் 3 சூரியன்கள் தெரிந்ததால் அதிர்ச்சியுடன் கூடிய ஆச்சரியத்தில் அங்கு இருந்த மக்கள் உறைந்தனர்.

சீனாவின் மேற்கு மாகாண மான ஜின்ஜியாங்கில் உள்ள கோர்காஸ் நகரில் ஒரே நேரத் தில் 3 சூரியன்கள் தெரிந்தது. முதலில் இரண்டு சூரியன்கள் தெரிந்ததைக் கண்டு ஆச்சரியப் பட்ட மக்கள் அடுத்த சில மணி நேரத்தில் 3-வது சூரியன் தெரிந் ததால் அதிர்ச்சியுடன் கூடிய ஆச்சரியத்தில் உறைந்தனர்.

சூரிய ஒளி ஈரப்பகுதியை ஊடுருவிச் செல்லும்போது வானில் இருக்கும் பனித்துகள்களின் மீதுபட்டு பிரதிபலிப்பதால் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படும்



என்று வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். ஆனால் இது போன்ற நிகழ்வு பனிப்பிரதேசத் தில்தான் தெரியும். இந்த முறை பனிப்பொழிவு குறைந்த ஜின்ஜி யாங் மாகாணத்தில் இந்த நிகழ்வு ஏற்பட்டுள்ளது அதிசயம்தான் என் றும் அவர்கள் தெரிவித்தனர். (ஜ-2)

# வடக்கு பிரதம செயலாளருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பிரதம செயலாளராக கடமையாற்றும் அ.பத்திநாதன் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

இவரது இடத்திற்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சு ஒன்றில் செயலாளராகக் கடமையாற்றிய வே.சிவஞானசோதியின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட நிலையில் அவரின் ஓய்வுக்காலம் நெருங்குவதால் வடக்கில் நிர்வாக சேவை அதிகாரி ஒருவருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு வடக்குமாகாண பிரதம செயலாளராக நியமிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.(இ-10)

# அநாகரிகமாக செயற்படும் அதிகாரிகள் சிறைசெல்ல வேண்டிவரும்!

## கருணா எச்சரிக்கை

(மாங்காடு)

**மட்டக்களப்பில் சில அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அநாகரிகமாக செயற்படுகின்றனர். அதே நேரத்தில் ஊடகவியலாளர்கள் அதிகாரிகளுக்கு எதிராக செயற்படுவார்களாக இருந்தால் பல அதிகாரிகள் சிறைசெல்ல வேண்டிய நிலை ஏற்படும் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) எச்சரித்தார்.**



மட்டக்களப்பு மாங்கா்ட்டில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.நல்லாட்சி என்று கூறிக் கொண்டு வந்த அரசாங்கத்தில் கடைசி நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு ஊடகவியலாளர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.இந்த அநாகரிகமான செயலை அதிகாரிகள் செய்தனர். என்னுடைய பல தவறுகளையும் ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அதனை நான் வரவேற்றுள்ளேன். ஊடகவியலாளர்கள் தவறுகளை சுட்டிக் காட்டும் போது அதனை நாம் திருத்திக் கொள்ளலாம். அதைவிட ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் அனைவருக்கும் தேவை.ஏனென்றால் பல அதிகாரிகளின் ஊழல்களைத் தட்டிக் கேட்பதற்கு ஊடகவியலாளர்கள் தேவை.


எனவே ஊடகவியலாளர்களை தண்டிப்பதை அதிகாரிகள் கைவிட வேண்டும். இதைவிட ஊடகவியலாளர்கள் தன்னிச்சையாக செயற்பட்டு அதிகாரிகளுக்கு எதிராக செயற்பட்டார்கள் என்றால் பல அதிகாரிகள் சிறை செல்லவேண்டி வரும். ஏனென்றால் அதிகாரிகள் மீது அவ்வளவு பெரிய முறைப்பாடுகள் உண்டு. எனவே ஊடகவியலாளர்களை தண்டிப்பதை அதிகாரிகள் கைவிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரில் கையாண்ட உத்திகள் குறித்து

# இலங்கைப் படையினருக்கு ரஷ்ய நிபுணர்கள் விளக்கம்

(கொழும்பு)

சிரியாவில் ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரில், ரஷ்ய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட வான் பாதுகாப்பு. நடவடிக்கைகள் மற்றும் போர் பொறியியல் நடவடிக்கைகள் குறித்து ரஷ்ய இராணுவ நிபுணர்கள் இலங்கைப் படை அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளனர்.



இலங்கை வந்துள்ள ரஷ்ய இராணுவ நிபுணர்கள், இலங்கைப் படை அதிகாரிகளுக்கு, சிரியாவில் தமது போர் நடவடிக்கை அனுபவங்களை விளக்கி வருகின்றனர்.

சிரியாவில் தாம் மேற்கொண்ட தாக்குதல் மற்றும் தற்காப்புக்கான வான் பாதுகாப்பு. நடவடிக்கைகள் மற்றும். போர் பொறியியல் நடவடிக்கைதள் தொடர்பான விரிவான விளக்கவுரைகளை அவர்கள் இலங்கைப் படையினருக்கு அளித்தனர்.

ரஷ்ய இராணுவத்தின் பொறியியல் பிரிவு தலைவர் லெப். ஜெனரல் **Iurri Stavitskii** தலைமையிலான குழுவினர் இலங்கை வந்து விளக்கங்களை அளித்தனர்.

இவர்கள் திருகோணமலை, வன்னி உள்ளிட்ட பகுதிகளுக்கும் சென்றதுடன். கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள படையினருக்கு புதிய உத்திகள், தொழில் நுட்பங்கள் குறித்தும் விளக்கமளித்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எவ்வுயிரும் தம்முயிர் போல...!

ஒரு தந்தை தன்னோட பிள்ளையை ரொம்ப தைரியசாலியாக வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக அவனைக் கூப்பிட்டு உட்கார வைத்து இப்படி உபதேசம் செய்தார். இதோ பாருப்பா... நான் உன்னோட இருக்கிறபோது எல்லாம் எதுக்கும் பயப்பட மாட்டேன் ரொம்பத் துணிச்சலாக இருப்பேன். ஒருநாள் ஒரு அப்பாவி எலியை ஒரு பூனை துரத்திக் கொண்ட ஓடி விட்டது. நான் உடனே என்ன செய்தேன் தெரியுமா? அந்தப் பூனையைப் பிடித்தேன். அதாலே ஒரு பட்டாசுச் சரத்தை கட்டினேன். கொளுத்தி விட்டேன். படபட என்று வெடிக்க ஆரம்பித்து விட்டது. அது துள்ளிக் கொண்டு அங்கேயும் இங்கேயும் ஓடியிருக்குப் பாரு ஓட்டம் ரொம்ப தமாஷ் என்றார் அப்பா.இப்படி சொல்லிவிட்டு பையனைப் பார்த்து இதைக் கேட்கிறபோது உனக்கு இன்னும் துணிச்சல் வருகிறதா என்று கேட்கிறார். வருகிறது என்றான் பையன். எப்படி என்றார் அப்பா.எலியை விரட்டினதுக்காகப் பூனை வாலிலே பட்டாசு கொளுத்தீனீர்கள் நீங்கள் பூனையை விரட்டினதுக்காக உங்க கழுத்திலேயே பட்டாசு சரத்தை மாட்டினால் என்ன என்று தோன்றுகிறது என்றான் பையன். பையனோட துணிச்சல் அப்பாவையே நடுங்க வைத்து விட்டது. அது சரி ஒரு அப்பா பிள்ளைக்கு இப்படியா உபதேசம் செய்வது? எல்லோரிடமும் அன்பாகப் பழகுகிறது எப்படி என்று சொல்லிக் கொடுக்க வேண்டும். பிஞ்சு உள்ளத்திலே நஞ்சைத் தூவலாமா? ஒருநாள் விநாயகர் ஒரு பூனையோட விளையாடிக் கொண்டிருந்தாராம். அப்படி ஆசையாக விளையாடிக் கொண்டிருந்த போது அவருடைய கை நகம் தவறுதலாக பூனையோட முகத்திலே பட்டுட்டுதாம். அது ஒரு சின்னக் கீறலை உண்டாக்கி விட்டதாம். அப்போது அதை அவர் பெரிதாக நினைக்கவில்லை. கொஞ்ச நேரத்துக்கு அப்புறம் விநாயகர் வீட்டுக்கு வந்தார். அவங்க அம்மா பார்வதி தேவியைப் பார்த்தார். பார்வதி தேவி கன்னத்திலே விரலாலே கீறின ஒரு அடையாளம் இருந்தது. விநாயகருக்கு அதிர்ச்சி– ஆச்சரியம். நம்ம அம்மா இந்த உலகத்துக்கே தாயார். அப்பேர்ப்பட்ட அவங்க முகத்திலேயே கீறலை உண்டாக்க கூடியவர்கள் யாராக இருக்க முடியும்? என்று யோசித்தார். தாயே! உன்னோட கன்னத்திலே இந்த வடு எப்படி அம்மா ஏற்பட்டது என்று கேட்டார். குழந்தாய்! இது நீங்க செய்த காரியம் தானப்பா. உன் கை நகம் கீறினதாலே ஏற்பட்ட வடு தான் இது என்றார் அவர் விநாயகர் திடுக்கிட்டு போயிட்டார். எப்படிம்மா அது? நான் எந்தக் காலத்திலேயும் உன்னைக் கீறினதாக நினைவில்லையே என்றார். விநாயகர் திகைத்துப் போய். நின்றார் பார்வதி தேவி சொன்னார். இதோ பாருப்பா! இந்த உலகத்திலே உள்ள எல்லா உயிர்களிலேயும் நான் இருக்கிறேன்.நான் தான் இந்த உலகமாயிருக்கிறேன். ஆகையால் நீ யாரைத் துன்புறுத்தினாலும் அது உண்மையிலே என்னைத் துன்புறுத்தினதாகத் தான் வந்து முடியும்! என்றார்.விநாயகர் மனதுக்குள்ளே ஒரு வெளிச்சம் ஏற்பட்டது. அதுக்கப்புறம் அவர் யாரையும் கல்யாணம் செய்து கொள்ளாததிற்கு அதுதான் காரணமாம். இந்த உலகத்திலே எல்லாவற்றையும் தாயின் வடிவமாக பார்க்க ஆரம்பித்து விட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்தக் கதையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.நபிகள் நாயகம் ஒரு தடவை ஒரு நாற்காலியிலேயே உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாராம். அப்போது அவரோட உடை யிலே ஒரு கீழ்ப்பகுதி தரையிலே படிந்து கிடந்திருக்கு. அங்கே விளையாடிக் கொண்டிருந்த பூனை அது மேலே வந்து படுத்துத் தூங்கிவிட்டது.

தொழுகை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. நபிகள் நாயகம் எழும்பப் பார்த்தார். அப்போது தான் பூனை தன்னோட உடையிலே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது கண்ணிலே பட்டது. பூனையோட தூக்கத்தை கலைக்க விரும்பவில்லை. அவர் தம் சகோதரியைக் கூப்பிட்டார். அவர் ஒரு கத்தரிக் கோல் எடுத்துக் கொண்டு வரச் சொன்னார். பூனை படுத்திருந்த உடைப் பகுதியை மட்டும் கத்தரித்து விட்டு அவர் தொழுகைக்குப் போய் விட்டார். பிற உயிர்களிடம் எப்படி அன்பு காட்ட வேண்டும் என்பதைப் பெரியவங்க எவ்வளவோ விதத்திலே நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும் எத்தனை பேர் மனசிலே அது எல்லாம் உறைத்திருக்கிறது?நாங்களும் எங்களுடைய உடைட மேலே ஒரு பூனை படுத்திருந்தால் ஒரு கத்தரிக் கோலைத்தான் எடுத்துக் கொண்டு வரச் சொல்லுவோம்.துணிகயை வெட்டுவதற்காக இல்லை பூனையோட வாலை வெட்டுவதற்கு!

ஒரு ஆள் ரொம்பப் பிரியமாக ஒரு பூனையை ஆற்றிலே குளிப்பாட்டிக் கொண்டிருந்தார். எப்படி? அந்த பூனையை ஆற்றுத் தண்ணியில் அமுக்கி அமுக்கி. அந்த வழியாகப் போன பெரியவர் ஒருவர் இதைப் பார்த்தார்.இதோ பாருப்பா பூனையை அது மாதிரி ஆற்றுத் தண்ணீரிலே அமுக்கிக் குளிப்பாட்டாதே .மூச்சுத் திணறிச் செத்துப் போய்விடும் என்று அட்வைஸ் செய்தார் அவர். நீ போய்யா உன் வேலையைப் பார்த்துக் கொண்டு. எனக்கு எல்லாம் தெரியும்! என்றான் இவன். சரி என்று அவர் போய்விட்டார். கொஞ்ச நேரம் கழித்து அவரே அந்த வழியாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார். ஆற்றிலே பூனையைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தவன் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தான். பக்கத்திலே அந்தப் பூனை செத்துக் கிடந்தது. இதைப் பார்த்தார் பெரியவர். நான் தான் அப்பவே சொன்னனே... அந்தப் பூனையை ஆற்றிலே நனைக்காதே என்று அதைக் கேட்டுக் கொண்டிருந்தால் இப்படியாயிருக்குமா என்றார். அந்த ஆளு கோபமாக இவரை முறைத்துப் பார்த்தான். அட போய்யா! இந்த பூனை ஆற்றிலே குளித்ததனாலே ஒன்றும் செத்துப் போகவில்லை! குளித்ததற்கு அப்புறம் அதோட உடம்பு ஈரமாக இருக்கிறது என்று அதைப் பிழிந்தேன்அதனாலே தான் இப்படியாகிவிட்டது! என்றான்.

# ஐ.தே.கவுக்குள் முரண்பாடுகள் தோன்றியிருப்பதை மூடிமறைக்க வேண்டிய தேவையில்லை



## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் தோன்றியிருப்பதை மூடி மறைக்க வேண்டிய தேவையில்லை எனத் தெரிவித்த அக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, சஜித்தை ஆதரித்த மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஆரம்பத்தைப் போன்றே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவுக்கு தீர்வு காணப்படவில்லை. அதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. நாட்டு மக்கள் அனைவரும் இதைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றனர்.

சுமார் 55 இலட்சம் மக்கள் சஜித் பிரேமதாஸ மீது நம்பிக்கை வைத்து அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வாக்களித்தனர்.

சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்த அனைவரும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான தீர்மானத்தையே எடுத்திருக்கிறார்கள். இவ்வாறு வாக்களித்த மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களது எதிர்பார்ப்பை எவ்வித பேதமும் இன்றி ஐக்கிய தேசியக் கட்சி நிறைவேற்ற வேண்டும். இது தலைவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.

எனவே கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு விரைவில் உரிய தீர்வு காண வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ரணிலுக்கு அனுப்பிய கடிதத்தில் சஜித் அணியின் 26 பேர் கையொப்பம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொறுப்புக்களுக்கு புதியவர்களை நியமித்தல், தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடல் என்பவற்றுக்காக கட்சியின் மத்திய செயற்குழுவை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுமாறு தெரிவித்து அக்கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தரப்பிலிருந்து 26 பேருடைய கையொப்பத்துடன் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது.

இக்கடிதத்தில் சஜித் பிரேமதாஸவை பிரதிநிதித்துவப்படுத்தும் பின்வருவோர் கையொப்பமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சந்திராணி பண்டார, ஆனந்த குமாரசிறி, தலதா அத்துகோரள, திலிப் வெத ஆராச்சி, ஹரீன் பெர்னாண்டோ, வசந்த அலுவிகாரே, ரவீந்திர சமரவீர, சுஜீவ சேனசிங்க, எட்வட் குணசேகர, ஜே.சீ. அலுவத்த, ரஞ்சித் மத்தும பண்டார, கயந்த கருணாதிலக, நளின் பண்டார, ஹர்ச த சில்வா, அஜித் பி.பெரேரா, லகீ ஜயவர்த்தன, அனோமா கமகே, கபீர் ஹாசிம், மலிக் சமரவிக்கிரம, மங்கள சமரவீர, எரான் விக்கிரமரத்ன, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், சிட்டின ஜயரத்ன, துசிதா விஜேமான்ன, ரோஸி சேனநாயக்க மற்றும் நிரோசன் பெரேரா ஆகியோர் கையொப்பமிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் வீதியோர சுவர்களில் சித்திரம்

(கொழும்பு)

இளைஞர்.யுவதிகளால் வீதிகளிலுள்ள சுவர்களில் வர்ணம் பூசி. சித்திரம் வரைந்து அழகுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வரையப்பட்ட ஓர் சித்திரம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.



ஏனெனில் குறித்த சித்திரம் தமிழர்களை கழுத்த றுத்துக் கொலை செய்வேன் என சைகை மூலம் எச்சரித்த பிரித்தானிய தூதரக அதிகாரி பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் சைகைக்கு ஒத்தாக வரையப்பட்டுள்ளது.

இதேவேளை பிரித்தானிய நீதி மன்றம் பொது ஒழுங்குச் சட்டத்தை மீறியதாகக் குறிப்பிட்டு அவருக்கு 2 ஆயிரத்து 500 ஸ்ரேலிங்க் பவுண்ட் அபராதம் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### அமைச்சுக்கள், அரச துறைகளுக்கு

# சிற்றூழியர்களை நியமிக்க நிதியமைச்சு தடை விதிப்பு

(கொழும்பு)

அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள துறைகளுக்கு சிற்றூழியர்களை நியமிக்க நிதி அமைச்சு தடை விதித்தது. இந்த வேலைவாய்ப்பை தமது அரசியல் ஆதரவாளர்களுக்கு அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டு வந்ததையடுத்தே இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

தொழிலாளர், சிற்றூழியர்கள், அலுவலக உதவியாளர்கள், பாதுகாவலர்கள் இந்த வகைப்பாட்டிற்குள் அடங்குவர். தேவைக்கு மீறிய விதத்தில் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் இந்த வகை நியமனங்கள் அரசியல் ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டு வருவதையடுத்தே இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இது தொடர்பில் அனைத்து அமைச்சுக்களுக்கும் நிதி அமைச்சு சுற்றறிக்கை அனுப்பியது.

அதில், இனிமேல் அத்தகைய ஆட்சேர்ப்பு செய்வதாயின் திறைசேரியின் ஆலோசனை பெற்றிருக்க வேண்டும் என்று அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த நியமனங்கள் வழங்க வேண்டுமெனில், அதற்கான கோரிக்கைக் கடிதத்தை அமைச்சு சார்பில் திறைசேரிக்கு அனுப்ப வேண்டும்.

ஊழியர்களைக் குறைப்பது மற்றும்அரசு நிறுவனங்களில்ஊழியர்களுக்கான செலவினங்களைக் குறைப்பதே இதன் நோக்கம்.

முன்மொழியப்பட்ட திட்டத்திலிருந்து எந்தவொரு நபரும் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு திட்டமும் கருவூலத்தில் இருக்கும்.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ 'பல்நோக்கு மேம்பாட்டு பணிக்குழுவை' அமைப்பதற்கான அமைச்சரவை ஆய்வறிக்கையை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு வந்தது. இதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு பல்வேறு துறைகளில் பொருத்தமான பயிற்சி அளித்த பின்னர் அரசு நிறுவனங்களில் வெற்றிடங்களை நிரப்ப அரசு திட்டமிட்டது.

அமைச்சரவை ஆய்வறிக்கையின் படி, ஒரு இலட்சத்து 30 ஆயிரம் நபர்கள் பணிக்குழுவின் கீழ் பயிற்சிக்கு சேர்க்கப்படுவார்கள். ஆறுமாத காலப்பகுதியில் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்கள். எட்டாம் வகுப்பு வரை அல்லது க.பொ.த சா/த வரையான கல்வித்தரமுள்ளவர்களே இதற்காக தெரிவு செய்யப்படுவர்.

பல்நோக்கு மேம்பாட்டு பணிக்குழு 2020 ஜனவரி 15 முதல் தனி அரசு துறையாக நிறுவப்படும்.

பயிற்சி பெற்றவர்கள் பராமரிப்பு மற்றும் சிவில் பணிகளுக்காக பணியமர்த்தப்படுவார்கள். பாடசாலைகள், மருத்துவமனைகளில் பராமரிப்பாளர்களாக உதவுதல், கிராமங்களை வனவிலங்கு அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் சேவைகளுக்கு உதவும் துணை சிவில் சக்தியாக செயற்படுவார்கள் என அந்த சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# விபத்தில் சிக்கிய 500 கோழிகள் உயிரிழப்பு



(அட்டாளைச்சேனை)

விற்பனைக்காக கோழிகளை ஏற்றிச் சென்ற சிறிய ரக கன்டர் வாகன்ம் நேற்று அட்டாளைச் சேனை பிரதேசத்தில் மரமொன்றில் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மூவர் பலத்த காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பிரதேசத்திலிருந்து அக்கரைப்பற்று பகுதியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த குறித்த வாகனம் நேற்றுக் காலை 5.15 மணியளவில் அக்கரைப்பற்று-கல்முனை பிரதான வீதியின் அட்டாளைச்சேனை சதோச விற்பனை நிலையத்திற்கு முன்னால் இருந்த மரமொன்றில் மோதுண்டதாலேயே இவ் விபத்து இடம்பெற்றது.

இதில் மூவர் படுகாயமடைந்ததுடன் வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட சுமார் 500 கோழிகள் உயிரிழந்தன. (இ-7)

# சாதனையாளர் மதிப்பளிப்பு

கொடிகாமம்,டிசெ.16
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மாகாண சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்கள தலைவர் செ. உதயகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ் பல்கலைக்கழகக் கல்வியியற் துறை தலைவர் திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம், வடக்கு மாகாணத் திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் இ. உமாகாந்தன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், வடக்கு மாகாணப் பேரவைச் செயலாளர் திருமதி ரூபிணி வரதலிங்கம், யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பொ.வாகீசன், வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் இ.பத்மநாதன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.பரமானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

# கடலில் மிதந்து வந்த 1448 கிலோ புகையிலை

மன்னார்,டிசெ.16
பேசாலைக் கடற்கரைப்பகுதியில் ஆயிரத்து 448 கிலோ கிராம் எடையுடைய புகையிலைப் பொதிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



வடக்குக் கடற்கரையில் சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலைத் தடுக்கும் முகமாக இலங்கைக் கடற்படையின்வி சேட அணியொன்று களமிறக்கப் பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையின் கரையோரப் பாதுகாப்புப் படையுடன் இணைந்து தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முந்தினம் மன்னார் பேசாலைக் கடற்கரைப் பகுதியில் மிதந்து வந்த பொதிகளைக் கடற்படையினர் சோதனையிட்டனர். அவற்றிலிருந்து ஆயிரத்து 448 கிலோ கிராம் எடையுடைய 29 புகையி லைப்பொதிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட பொதிகள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சுங்கத் திணை க்களத்தினரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்க ப்பட்டுள்ளது. (க-111)

# வவுனியா நூலகத்தின் வாசிப்பு மாத நிகழ்வு



வவுனியா,டிசெ.16
வவுனியா நகரசபை மற்றும் பொதுநூலகத்தின் தேசியவாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு நகரசபை கலாசார மண்டபத்தில் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நேற்று முன் தினம்நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ் தவிசாளர் வெளியிட்டு வைக்க, நூலின் முதல் பிரதியை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் பெற்றுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பொதுநூலகத்தால் நடத்தபட்ட வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால், பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கபட்டன.

நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காஞ்சனா, உப நகர சபை உப தவிசாளர் சு.குமாரசாமி, நகரசபைச் செயலாளர் இ. தயாபரன், வர்த்தகசங்கத் தலைவர் சுஜன் சண்முகராஜா,நகரசபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம்,பா.பிரசன்னா,சு.காண்டீபன்,ஜெயவதனி,புஞ்சிகுமாரி,சமந்தா, நூலகர் பா.உருச்சந்திரன், ப்பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

# இருவர் படுகாயம்

கொடிகாமம்,டிசெ.16
இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து க்குள்ளாயதில் இருவர் படுகாயமடைந்தனர். இந்த விபத்து ஏ9 வீதியில் மிருசுவில் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் நேற்று முந்தினம் சனிக்கிழமை மதியம் இடம்பெற்றது.

விபத்தில் இளைஞன் ஒருவரும் பெண் ஒருவரும் படுகாயமடைந்து கொடிகாமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (க-159)

# அழிக்கப்பட்டது 1 லட்சம் ரூபா!



யாழ்ப்பாணம்,.டிசெ.16
உரிய வகையில் களஞ்சியப்படுத்தாமல் வாகனத்தில் கொண்டு வரப்பட்ட சுமார் ஒரு இலட்ச ரூபா பெறுமதியான பால் உற்பத்திப் பொருள்கள் நீதிமன்ற உத்தரவில் அழிக்கப்பட்டன.

காரைநகரில் உரிய வெப்ப நிலையைப் பேணாமல் கொண்டு வரப்பட்ட பால் உற்பத்திப் பொருள்களான தயிர் , யோக்கட் , சீஸ் மற்றும் யோக்கட் குடிபானம் ஆகியவற்றை அந்தப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கைப்பற்றினார்.

அந்த உற்பத்திப் பொருள்கள் 3 தொடக்கம் 4 பாகை செல்சியஸ் அளவில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட வேண்டும். ஆனால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசோதனை செய்யும் போது , அவை 14 பாகை செல்சியசுக்கும் அதிகமான வெப்ப நிலையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அது தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில், பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு விசரரணையின் போது எதிராளி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட பால் உற்பத்தி பொருள்களை அழிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவை அழிக்கப்பட்டன. (க-37)

# பரிசில் விழா

காரைநகர்,டிசெ.16
காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் இடம்பெறும்.

கல்லூரி முதல்வர் தி.மதிவதனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், கௌரவ விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி உசா சுபலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-250)

# இரு யானைகளின் சடலங்கள் மீட்பு



வவுனியா,டிசெ.16
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவு க்குட்பட்ட கன்னாட்டி கணேசபுரம் பகுதியில் உருக்குலைந்த நிலையில்யானைகள் இரண்டின் சடலங்கள் மீட்கப்பட்டன. காட்டுப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதை அறிந்த கிராம மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவஇத்துக்குச்சென்ற பொலிஸார், சடலங்களை அவதானித்து, வனஜீவராசிகள்திணைக் களத்துக்குத் தகவல் தெரிவித்தனர்.

யானைகளின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதுடன், அவை 10 நாள்களுக்கு முன்பாகவே உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-110)

## குணநாயகத்தின் குற்றச்சாட்டு

# பச்சைப் பொய்

## அமெரிக்கத் தூதரகம் கூறுகிறது

கொழும்பு, டிசெ. 16

பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா நாட்டை விட்டு வெளியேறியமை, அதன் பின்னர் இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் பெண் பணியாளர் கடத்தப்பட்டமை உள்ளிட்ட விவகாரங்களில் தமக்கு எந்தத் தொடர்புமில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத்துறையின் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா சுவிஸுக்கு தப்பிச் சென்றமை தொடர்பான அவதானத்தை திசைதிருப்பும் நோக்கத்திலேயே தூதரகப் பணியாளர் கடத்தப்பட்டதாக சித்தரிக்கப்பட்டிருக்க கூடும் என்று குறிப்பிட்ட ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் நிரந்தர வதிவிட பிரதிநிதியும் இராஜதந்திரியுமான தமரா குணநாயகம் அவ்வாறு திசைதிருப்பும் செயற்பாட்டில் அமெரிக்கா பின்னணியில் இருக்கலாம் என்று குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தார்.

தமரா குணநாயகத்தின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கொழும்பில் உள்ள இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்கத் தூதுரகத்தின் பொது அலுவல்கள் அதிகாரி தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகப் பெண் ஊழியர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் இலங்கைச் சட்டங்களுக்கு உட்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எம்மைப் பொறுத்தவரையில் இந்த விடயத்துடன் அமெரிக்கா எவ்விதத்திலும் சம்பந்தப்படவில்லை.

சதி ஊகக் கருத்துக்களை உருவாக்குவதானது இந்த விடயத்தை சட்டத்தின் ஆட்சிக்கும், சர்வதேச நியமங்களுக்கும் உட்பட்ட வகையில் தீர்ப்பதற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை, -என்றார். (ஒ.5)

## 72மணி நேரம் விசாரணை

கொழும்பு, டிசெ. 16

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட வெள்ளை வான் சாரதிகளாக தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட இருவரிடமும், 72 மணி நேர விசாரணை நடத்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் அனுமதி பெற்றுள்ளனர். சந்தேக நபர்களை இன்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர். (ஒ.5)

## நிசாந்தவை நாடு கடத்துங்கள்

கொழும்பு, டிசெ. 16

முன்னறிவிப்பு இல்லாமல் சுவிஸுக்கு தப்பிச் சென்ற குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரி நிசாந்த சில்வாவை நாடு கடத்துவது குறித்து கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்துடன் வெளிவிவகார அமைச்சு விரைவில் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

உயர்மட்ட அரச வட்டாரம் ஒன்று இந்தத் தகவலை கொழும்பு ஆங்கில நாளிதழிடம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் குற்ற விசாரணைப் பிரிவு பணிப்பாளர் ஷானி அபேசேகர இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து, நிசாந்தசில்வா, குடும்பத்துடன் சுவிஸுக்கு தப்பிச் சென்றார்.

சுவிஸுடன் இலங்கை வலுவான உறவுகளைப் பேணினாலும், பல உயர்மட்ட விசாரணைகளுடன் நிசாந்த சில்வா தொடர்புபட்டுள்ளதால், அவரை நாடு கடத்துமாறு சுவிஸ் அரசிடம் கோரவுள்ளதாக அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது. (ஒ.5)

## அங்கஜனின் அலுவலகம் சங்கத்தானையில் திறப்பு

சாவகச்சேரி, டிசெ.16

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் தென்மராட்சி, சங்கத்தானையில் நேற்றுத் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வட்டாரத்துக்கான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்துவக் பிரதிநிதிகள் மற்றும் அங்கத்துவ உறுப்பினர்களுக்கான அங்கத்துவ அட்டைகள், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் வழங்கப்பட்டன. (க-111)

## கூட்டுறவுக் கட்டடங்களை புதுப்பிக்க நடவடிக்கை

வடக்கில் கூட்டுறவு அமைப்புக்களின் கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்றவை பாவனையின்றி முடங்கி இருந்தால், அவற்றைப் பயன்பாட்டுக்கு உட்படுத்துவதற்கான ஆலோசனையை மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அநேகமான கூட்டுறவுச் சங்கங்களின் கட்டடங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் போன்றவை கடந்த சில வருடங்களாக எவ்வித செயற்பாடுகளும் இன்றி மூடப்பட்ட நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது. இவ்வாறு மூடப்பட்டுக் காணப்படும் கட்டடங்களில் செயற்பாடுகளை ஆரம்பிப்பதன் மூலம், சங்கங்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும். அதற்குரிய நடவடிக்கைகளை கூட்டுறவு அமைப்புக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மக்கள் செறிந்து வாழும் இடங்களிலும், முக்கிய பகுதிகளிலும் கூட்டுறவு அமைப்புக்களின் கட்டடங்கள் தொழிற்சாலைகள் என்பன பயன்பாடு இன்றி பூட்டப்பட்டுள்ளன. எனவே சம்பந்தப்பட்ட சங்கங்கள் விரைவாக அவற்றை செயற்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும்.

அதேவேளை புலோலி, பருத்தித்துறை, அளவெட்டி போன்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பாவனை இன்றி பூட்டப்பட்ட கட்டடங்கள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனையில் புனரமைப்புச்செய்யப்பட்டு அவை மக்கள் கூட்டுறவுக்கடைகளாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதனால் அந்தக் கடைகளில் வியாபார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. எனவே ஏனைய கூட்டுறவு அமைப்புக்களும் முன்னுதாரணமாகச் செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-17)



## மாணவனுக்கு மதிப்பளிப்பு

வவுனியா, டிசெ.16

வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகம் வீ 3 பவுண்டேசன் அனுசரணையில், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்த மாணவன் மதிப்பளிக்கப்பட்டார்.

வவுனியா தவசியார் குளம் அ.த.க.பாடசாலை மாணவன் திவ்யன் வசந்தராஜாவுக்கு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் தின விழாவை முன்னிட்டு, மாவட்ட சமூக சேவை அலுவலகம் மதிப்பளிப்பை வழங்கியது.

அத்துடன் வீ 3 பவுண்டேசன் ஊடாக கமலாதேவி திருநாவுக்கரசின் 3 ஆம் ஆண்டு நினைவாக பிள்ளைகள் ரமணன், பத்மன் ஆகியோர் மாணவனுக்கு துவிச்சக்கர வண்டியையும் அன்பளிப்பாக வழங்கினர். (க-222)





சிறப்பும் தேவையுடைய மாணவர்களுக்கு உதவித்திட்டம் வழங்குவதற்கு நிதி திரட்டும் நோக்குடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கார் வோஸ் (CAR WASH) எனும் வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. பல்கலைக்கழக முன்றலில் நடைபெற்ற வேலைத்திட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் பங்களிப்பு வழங்கினர். (க-37)



### பெரமுனவுடன் இணைந்தே போட்டி

# பொதுத் தேர்தலில் சின்னம் குறித்து உயர்மட்ட குழு பேசித் தீர்மானிக்கும்

### சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார கூறுகிறார்


(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்தே எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும். எனவே மீண்டும் சின்னம் தொடர்பில் பிரச்சினைகளை ஏற்படுத்தத் தேவையில்லை. அது குறித்து உயர் மட்டத்தில் பேசி உரிய காலத்தில் தீர்க்கமானதொரு முடிவு எடுக்கப்படும் என்று சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகியவற்றுக்கிடையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்ட போது ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு சின்னத்திலும் பொதுத் தேர்தலில் கதிரைச் சின்னத்திலும் போட்டியிடுவதற்கு இணக்கம் காணப்பட்டது.

எனினும் தற்போது பொதுஜன பெரமுனவினர் பொதுத் தேர்தலிலும் மொட்டு சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்ற நிலையில் இவ்விடயம் குறித்து சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக்கா தொடர்ந்து பயிற்சி



(கொழும்பு)

ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்னர், இலங்கைக் கடற்படையின் முதலாவது குழுவுக்கு அமெரிக்கக் கடற் படையினர் சிறப்புப் பயிற்சிகளை அளித்தனர்.

அமெரிக்கக் கடற்படையால், நிபுணத்துவ பரிமாற்ற திட்டத்தின் கீழ், இலங்கைக் கடற்படையின் 4 ஆவது அதிவேக தாக்குதல் படகு அணி மற்றும் சிறப்புப் படகு அணி ஆகியவற்றைச் சேர்ந்த கடற்படையினர் 35 பேருக்கு 'Naval Special Warfare Maritime Security Course 2019" என்ற இரண்டு வாரகாலப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமான பயிற்சிகள், நேற்று முன்தினம் நிறைவடைந்ததுடன் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இலங்கைக் கடற்படையின் சிறப்புப் படகு அணியைச் சேர்ந்த 24 பேரும் 4 ஆவது அதிவேக தாக்குதல் படகு அணியைச் சேர்ந்த 11 பேரும் இந்தப் பயிற்சிகளைப் பெற்றனர்.

இவர்களுக்கு அமெரிக்கக் கடற்படையின் சிறப்புப் படகு குழுவைச் சேர்ந்த எட்டு அதிகாரிகள் பயிற்சிகளை அளித்தனர்.

கோட்டாபய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், இலங்கையில் அமெரிக்க நிபுணர்களால் அளிக்கப்பட்ட முதலாவது பயிற்சி நெறி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1918

Search for people, places and things | Nagendran Home

**பத்மினி**

என் இடத்தில் இருந்து சிந்திக்க தெரியாதவர்கள்



என்னை பற்றி குறை சொல்ல தகுதியற்றவர்கள்

**ராகேஸ்**

நான் எதிலும் தோற்பதே இல்லை



ஒன்று வெற்றி கொள்கிறேன் இல்லை... கற்றுக் கொள்கிறேன்.


**பரத்**

மற்றவர்களுக்கு பாவம் பார்த்தே...




நம்மில் பலர் பாவமான நிலைக்கு தள்ளப்படுகிறோம்...

**பரமேஸ்வரி**



பிறருக்கு கொடுத்து வாழ்!!! கெடுத்து வாழாதே!!!

**ருக்குமணி**



நீங்கள் செய்யும் தர்மம் மழை போல் வரவேண்டிய ஆபத்தை பனி போல நீக்குகிறது...

**தங்கவேல்**

பழகிய மிருகங்களிடம் இருக்கும் பாசம் கூட... பழகிய மனிதர்களிடம் இருப்பதில்லை...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வீடமைப்பு நிர்மாணப் பணிகள் முழுமைப்படுத்தப்படவில்லை

## சஜித் மீது இந்திக்க சாடல்



(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் கடந்த அரசாங்கம் முன்னெடுத்த வீடமைப்பு நிர்மாண பணிகளில் தேசிய நிதி பாரியளவில் செலவிடப்பட்டது. ஆனால் நிர்மாண பணிகள் முழுமைப்படுத்தப்படவில்லை. வீடுகளையும், தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொண்டவர்கள் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். என பொது நிர்வாகம் , வீடமைப்பு விவகாரம் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதியமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்காத்தில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சினால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் குறித்த விசேட கலந்துரையாடல் பொது நிர்வாகம் , வீடமைப்பு விவகாரம் மற்றும் மாகாண சபை , உள்ளூராட்சி மன்ற பிரதிய மைச்சர் இந்திக அனுருத்த தலைமையில் அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டி. வி. சானக ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முன்னெடுத்த அபிவிருத்திப் பணிகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபைக்குள் இடம் பெற்ற பிரச்சினைகள் தொடர்பில் இதன் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதில் அவர்மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடந்த அரசாங்கத்தால் 337 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இதில் 84 வீடுகள் மக்களிடம் கைளிக்கப்பட்டன.மிகுதி 253 வீடுகளின் நிர்மாணப் பணிகள் இதுவரை காலமும் முழுமை பெறவில்லை.

2015ஆம் ஆண்டு மாதிரிக் கிராமங்கள் 15 மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டன. 2016ஆம் ஆண்டு 77 மாதிரிக் கிராமம் நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் அவற்றில் 49 முழுமைப்படுத்தப்பட்டு மிகுதி 28 முழுமை பெறவில்லை. 2017 ஆம் ஆண்டு 50 கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் 8 வீடுகள் மாத்திரமே முழுமைப்படுத்தப்பட்டன.

2018ஆம் ஆண்டு 104 மாதிரிக்கிராம நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் 15 கிராமங்கள் மாத்திரமே முழுமைப்படுத்தப்பட்டன. இழுபறி நிலையிலுள்ள அபிவிருத்தி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமாயின் நிதி அவசியம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிராம சக்தி அதிகாரிகள் 680 பேர் கடந்த அரசாங்கத்தில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் காரியாலயம் தொடர்பில் எவ்வித மான உரிய ஆவணங்களும் காணப்படவில்லை. அரசியல் தேவைகளுக்காக கிராம சக்தி அதிகாரிகளின் ஊடாக கடனுதவி வழங்கப்பட்டது.

இக்கடன் தொகை மீள பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பதற்கும் ஆவணங்கள் இல்லை. இவ்வாறு அரசியல் நோக்கங்களை கருத்திற்கொண்டு வீடமைப்பு நிர்மாணத்துறை ஊடாக பாரிய நிதி செலவிடப்பட்டது.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பணிகளை மையப்படுத்தி செலவிடப்பட்ட நிதி மற்றும் வழங்கப்பட்ட வீடமைப்பு கடன் வசதிகளின் ஊடாக பாரிய மோசடிகள் இடம் பெற்றன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அம்பாந்தோட்டை மாவட்ட அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்குவதற்காக 480 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டது. ஆனால் வீடு அபிவிருத்திக்காக 350 மில்லியன் ரூபாய் நிதி செலவு செய்யப்பட்டதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆவணங்களை பகி ரங்கப்படுத்தினார்கள்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒரு தரப்பினர் மாத்திரம் கடந்த அரசாங்கத்தால் வீடுகளை பெற்றுக் கொண்டு இன்று நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். ஏனைய தரப்பினர் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டு நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

நிர்மாணப் பணிகளால் பெருமளவில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டதுடன், நிர்மாணப் பணிகளில் பின்பற்றப்படும் விடயங்களும் மீளப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்குரிய பொறுப்பை இலங். அரசாங்கம் ஏற்க வேண்டும்-அரியநேத்திரன்



(வெல்லவெளி)

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதற்கும், அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்கும் உரிய பொறுப்பை இலங்கை அரசாங்கம் ஏற்க வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டு. அம்பாறை மாவட்ட தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் 1986 காலப் பகுதியிலே வடக்கு கிழக்கு தொடர்பாக எழுதப்பட்ட ஆக்கபூர்வமான விடயங்களோடு அவர் திம்பு பேச்சு வார்த்தையிலும் கலந்து கொண்டார். பின்னர் இலங்கை அரசுடனான பேச்சு வார்த்தைகள் சர்வதேசத்தினூடான பேச்சு வார்த்தைகள் ஈழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச செயற்பாட்டாளர் என பலவற்றிலும் அவர் பங்கேற்று வந்துள்ளார். அவரின் செயற்பாட்டை உலகத் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலை ஏற்பட்டிருந்தது.

அன்ரன்பாலசிங்கம் அவர்கள், இணைந்த வடக்கு-கிழக்கின் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வும் பெறவேண்டும் எனப் பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்தார்.

கடந்த 2009 மே 18 இற்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் மௌனத்திற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கின்ற செயற்பாட்டை ஏற்கனவே சர்வதேசத்தினூடாக மேற்கொண்டு வந்த புத்தி ஜீவி தான் அன்ரன் பாலசிங்கம் இவரை நினைவு கூரவேண்டியதன் தேவை உலகத் தமிழர்களுக்கு உள்ளது.

இதேவேளை தந்தை செல்வாவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி நாளை மறுதினம் 18 ஆம் திகதி 70 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.

எனவே தந்தை செல்வாவின் காலத்தில் இப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் தீர்வு கண்டிருந்தால் அநியாயமாக தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி இறந்திருக்க மாட்டார்கள். முள்ளிவாய்க்கால் வரைக்கும் தமிழ் மக்கள் இறந்திருக்க மாட்டார்கள். இவை அனைத்திற்குமான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசாங்கம் ஏற்க வேண்டும்.

அத்துடன் இன்றுவரை தமிழ் மக்கள் ஒரு ஏமாற்றப்பட்ட இனமாகத்தான் இருந்து கொண்டிருக்கின்றோம்.

தற்போது இலங்கையில் புதிய ஜனாதிபதி வந்துள்ளார். மூவின மக்களையும் ஒரே மாதிரித்தான் பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

பிரித்தானியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறுபட்ட நாடுகள் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. எனவே சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினை சென்று கொண்டிருப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம், மாவீரர்களின் தியாகங்கள், தொடர்ச்சியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னெடுப்புகள்தான் காரணமாகும். இவை அனைத்திற்கும் அடித்தளமிட்டவர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் தான்.

மேலும் யார் ஜனாதிபதியாக வந்தாலும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மக்கள் அனுபவிக்கின்ற அரசியல் உரிமையை தமிழ் மக்களுக்கும் தரவேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

இதைத்தான் தமிழ் மக்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் பிரதிபலித்துச் சொல்கின்றார்கள். எந்தவொரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தலைவர்கள் மீதும், தமிழ் மக்களுக்கு குரோதங்கள் இல்லை. மாறாக 70 வருடங்களாக இன்னும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற நடவடிக்கைதான் தொடர்கின்றது. இதனை தற்கால இளைஞர்கள் நன்கு அறிந்து செயற்பட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீர்த்தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

(புத்தளம்)

புத்தளம் கொட்டுக்கச்சிய நீர்த்தேக்கத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் பயணித்த வள்ளம் நீரில் மூழ்கியதில் குறித்த மீனவர் உயிரிழந்தார்.

கொட்டுக்கச்சிய 10 ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த என்டன் மைக்கல் பெரேரா (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மீனவர் மீன்பிடிப்பதற்காக வள்ளத்தில் சென்று வலைகளை போட்டு, மீண்டும் அந்த வலைகளை எடுக்க முயற்சி செய்த போதே வள்ளம் கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்ததாக பொலிஸார் கூறினர்.

இவ்வாறு உயிரிழந்த மீனவரின் சடலம் குறித்த நீர்த்தேக்கத்தில் இருந்து பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வெளியே எடுக்கப்பட்டதாகவும் ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 130 | 130 | 160 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 240 | 180 | 250 |
| தக்காளி | 140 | 150 | 180 | 130 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 70 | 80 |
| கோவா | 120 | 130 | 160 | 100 | 160 |
| கரட் | 300 | 300 | 320 | 210 | 320 |
| பூசணி | 50 | 50 | 60 | 70 | 80 |
| புடோல் | 160 | 140 | 180 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 420 | 400 | 420 | 500 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 200 | 160 | 160 |
| பாகற்காய் | 400 | 380 | 320 | 310 | 320 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 100 | 80 | 120 |
| பயற்றங்காய் | 260 | 250 | 260 | 200 | 240 |
| லீக்ஸ் | 240 | 280 | 320 | 180 | 400 |
| பீற்றூட் | 260 | 180 | 200 | 70 | 200 |
| கறிமிளகாய் | 150 | 260 | 300 | 200 | 240 |
| முருங்கைக்காய் | — | — | 800 | — | 600 |
| போஞ்சி | 240 | 240 | 240 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 130 | 180 | 170 | 160 |
| கீரை – 1 பிடி | 60 | 50 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 80 | 200 | 120 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 50 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 600 | 240 | 210 | 240 |
| வெங்காயப்பூ | 400 | — | 280 | — | — |
| முள்ளங்கி | 160 | — | 200 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 160 | 100 |

## விடுகதைகளும் விடைகளும்

• கூரை வீட்டைப் பிரிச்சா ஓட்டு வீடு! ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை! வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம்! அது என்ன?

**தேங்காய்**

• பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன?

**வானொலிப்பெட்டி**

• கந்தல் துணிக்காரி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்?

**சோளப்பொத்தி**

• வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்?

**பாம்பு**

• உடல் சிவப்பு. வாய் அகலம். உணவு காகிதம்- நான் யார்?

**அஞ்சல் பெட்டி**

• இது ஒரு பூ. முதற்பகுதி ஆதவனின் மறுபெயர் பிற்பகுதி தேசத் தந்தையை குறிக்கும். அது என்ன?

**சூரியகாந்தி**

• பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்?

**கிளி**

• இரவு வீட்டிற்கு வருவான். இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விடுவான்?

**நிலா**

• ஓடையில் ஓடாத நீர். ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?

**கண்ணீர்**

• அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?

**அம்மி குளவி**

## சிரிப்பின் தன்மையும் மனிதர்களின் பண்பும்

• வெற்றியில் சிரிப்பவன் வீரன்.

• கண்பார்த்து சிரிப்பவன் கஞ்சன்.

• துன்பத்தில் சிரிப்பவன் மனிதன்.

• மகிமையில் சிரிப்பவன் மன்னன்.

• விளையாமல் சிரிப்பவன் வீணன்.

• இடம் பார்த்து சிரிப்பவன் எத்தன்.

• மாண்பில் சிரிப்பவன் பண்பாளன்.

• மோகத்தில் சிரிப்பவன் வெறியன்.

• கற்பனையில் சிரிப்பவன் கவிஞன்.

• ஓடவிட்டு சிரிப்பவன் நயவஞ்சகன்.

• தெரியாதென்று சிரிப்பவன் நடிகன்.

• நின்று சிரிப்பவன் நினைவுள்ளவன்.

• ஓயாமல் சிரிப்பவன் பைத்தியக்காரன்.

• கோபத்தில் சிரிப்பவன் சிந்தனையாளன்.

• கொடுக்கும்பொழுது சிரிப்பவன் சூழ்ச்சியாளன்.

• இன்பத்தில் சிரிப்பவன் ஏமாளி.

• நினைவோடு சிரிப்பவன் அறிவாளி.

• தெரியாமல் சிரிப்பவன் பசப்பாளி.

• இருக்குமிடமெல்லாம் சிரிப்பவன் கோமாளி.

• குழைந்து சிரிப்பவன் சந்தர்ப்பவாதி.

• நிலைகண்டு சிரிப்பவன் காரியவாதி.

• அருளுக்கு சிரிப்பவன் ஆண்டி.

• தற்பெருமையில் சிரிப்பவன் கோழை

• சண்டையில் சிரிப்பவன் வ்ன்முறையாளன்.

• நிலை மறந்து சிரிப்பவள் காதலி.

• காதலால் சிரிப்பவள் மனைவி.

• அன்பால் சிரிப்பவள் அன்னை.

# சிறுவர் அரங்கம்

## கல்லூரிக் கட்டணம்



"என்னடா இப்ப வந்து சொல்றே?" என்றார் ராமமூர்த்தி.

"கல்லூரி நோட்டீஸ் போர்டில் போட்டிருக்காங்களாம். இன்னிக்குத்தான் ரவி பாத்துட்டு வந்து சொன்னான்" என்றான் மணி.

"நம்மகிட்ட அட்மிஷன் லெட்டர் கூடக் கிடையாது. அப்ளிகேஷன் போர்ம்ல கரெஸ்பாண்டண்ட் கையெழுத்துப் போட்டதோட சரி. அதையும் ஆஃபிஸ்ல வாங்கி வச்சுக்கிட்டு, நாங்க சொல்ற அன்னிக்கு ஃபீஸ் கட்டிடுங்கன்னு சொன்னாங்க. அதுக்கப்பறம் அவங்ககிட்டேருந்து லெட்டர் கூட வரலை."

"அதெல்லாம் போட மாட்டாங்கப்பா. அப்ளிகேஷன் நம்பரைச் சொல்லி ஃபீஸ் கட்ட வேண்டியதுதான்."

"இப்ப என்ன செய்யறது? இன்னும் நாலு நாள் கழிச்சுத் தான் ரிஜிஸ்ட்ரேஷன். அன்னிக்குத்தான் மீதிப்பணம் கொடுக்கிறதாச் சொல்லி இருக்கார் மாணிக்கம். இப்ப அவர்கிட்ட போய்ப் பணம் கேட்க முடியாதே!" என்று கவலைப்பட்டார் ராமமூர்த்தி.

"அப்பா! நீங்க கஷ்டப்பட்டு யார் யார் கிட்டயோ சிபாரிசு பண்ண, இந்த சீட்டை வாங்கி இருக்கீங்க. என் ஃபிரண்ட்ஸ் எல்லாம் ஒன்னோட மார்க்குக்கு இந்தக் கல்லூரியில எப்படிடா சீட் கிடைச்சதுன்னு கேக்கறாங்க. நாளைக்குப் பணம் கட்டலேன்னா என்னோட சீட்டை வேற யாருக்காவது கொடுத்தாலும் கொடுத்துடுவாங்க."

"காலம் கெட்டுப் போச்சு. இது 1970 ஆச்சே! இதுவே எங்க காலமா இருந்தா..."

"உங்க காலத்தில கல்லூரியில் படிக்கிற வாய்ப்பே உங்களுக்குக் கிடைக்லையே அப்பா?" என்றான் மணி.

"இப்ப மட்டும் என்ன? உன்னைக் கல்லூரியில் படிக்க வைக்கிற அளவுக்கு நமக்கு வசதியா இருக்கு? பி.யூ.சி வரையிலும் எப்படியோ படிக்க வச்சுட்டேன். பி.எஸ்.சி படிக்க வைக்க, கொஞ்சம் நிலத்தை வித்துத்தானே உன் பீஸ்°க்கே ஏற்பாடு பண்ணி இருக்கேன்? வாற பணத்தை செலவழிக்காம வச்சுக்கிட்டு, மூணு வருஷத்துக்கு பீஸ் கட்டணும்." என்றார் ராமமூர்த்தி.

"அது சரி. இப்ப ஃபீஸ் கட்ட, பணத்துக்கு என்ன பண்ணப் போறீங்க? மாணிக்கத்தையே கேக்கிறீங்களா?" என்றாள் அவர் மனைவி பார்வதி.

"அவரை நமக்குப் பழக்கம் கிடையாது. நம்ம நிலத்தை வாங்கறவரு அவரு. அவர் கொடுத்த அட்வான்ஸை வாங்கிக் கடனை அடைக்கப் பயன்படுத்தியாச்சு. மீதிப்பணம் ரெஜிஸ்ட்ரேஷன் போதுதான்னு அக்ரிமெண்ட்டிலே இருக்கு. இப்ப போய் அவர்கிட்ட எப்படிக் கேக்க முடியும்?"

"பையனை அழைச்சுக்கிட்டுப் போய், கேட்டுத்தான் பாருங்களேன்! நமக்கு வேற வழி என்ன இருக்கு?" என்றாள் பார்வதி.

"சரி. இப்பவே கிளம்பறேன். அவர் இல்லேன்னு சொன்னா அப்புறம் வேற வழி என்னன்னு பாக்கணும்."

ராமமூர்த்தியும், மணியும் மாணிக்கத்தின் வீட்டுக்குப் போன போது, நல்லவேளையாக அவர் வீட்டில் இருந்தார்.

"வாங்க, வாங்க" என்று வரவேற்றார் மாணிக்கம்.

"உங்ககிட்ட ஒரு உதவி கேக்கணும்,. நீங்க தப்பா நினைக்கக்கூடாது. இவன் என் பையன். திடீர்னு இவன் காலேஜ் அட்மிஷனுக்கு நாளைக்குள்ள பணம் கட்டணும்னு சொல்றாங்க.." என்று ஆரம்பித்தார் ராமமூர்த்தி.

"ஓ! ரெஜிஸ்ட்ரேஷன் அன்னிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை முன்னாடியே கொடுக்க முடியுமான்னு கேக்க வந்தீங்களா?" என்றார் மாணிக்கம்.

"மொத்தப் பணமும் வேண்டாம். ஒரு ஐநூறு ரூபா இருந்தா போதும், இப்போதைக்கு.."

"எங்கிட்ட கையில பணம் இல்லியே. எனக்கு வர வேண்டிய பணம்வர ரெண்டுநாள்ஆகும் யார்கிட்டயாவது கேட்டுப் பாக்கறேன். சாயந்திரம் வர முடியுமா?"

"வாறோம் சேர். எப்ப வரணும்னு சொல்லுங்க."

"ஆறு மணிக்கு மேல வாங்களேன். நீங்க வர வேண்டியதில்லை. உங்க பையனை அனுப்பிச்சாப் போதும்."

மாலை 7 மணிக்கு ராமமூர்த்தி மாணிக்கத்தின் வீட்டுக்குச் சென்றார்.

"வாங்க, நீங்களே வந்துட்டீங்களா? பையனை அனுப்பிச்சாப் போதும்ன்னு சொன்னேனே. நீங்க என் சிரமப்படறீங்க?"

"நான் எதுலயாவது கையெழுத்துப் போட வேண்டியிருக்குமோன்னு நெனைச்சுத்தான் .."

"கையெழுத்தா? அதுதான் சப் ரெஜிஸ்திரார் ஆஃபிஸ்ல கையெழுத்துப் போடப் போறீங்களே! இந்தாங்க பணம். சப் ரெஜிஸ்திரார் ஆஃபிஸ்ல மீதிப் பணத்தைக் கொடுக்கும்போது இந்த ஐநூறு ரூபாயைக் கழிச்சுக்கறேன்."

"நீங்க செஞ்சது பெரிய உதவி. யார்கிட்ட கேக்கறதுன்னே தெரியாமத் தவிச்சுக்கிட்டிருந்தேன்."

"இதுல என்னாங்க இருக்கு? நான் பெரிசா ஒண்ணும் பண்ணிடல! ரெஜிஸ்ட்ரேஷன் போது கொடுக்க வேண்டிய பணத்தில் ஒரு சின்னப் பங்கை நாலு நாள் முன்னாடியே கொடுத்திருக்கேன் அவ்வளவுதானே?"

"உங்களுக்கு வேணும்னா இது சின்ன உதவியா இருக்கலாம், எங்களைப் பொறுத்த வரையிலே நீங்க சரியான நேரத்தில உதவி பண்ணி, என் பையனோட படிப்பு தடைபடாம பண்ணியிருக்கீங்க. நானும் சரி, என் பையனும் சரி, இந்த உதவியை எப்பவுமே மறக்க மாட்டோம்" என்றார் ராமமூர்த்தி.

**குறள் 102**

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

**பொருள்:**

**உரிய காலத்தில் செய்யப்படும் உதவி சிறியதாக இருந்தாலும், அது இவ்வுலகை விடப் பெரியதாகக் கருதப்படும்.**

காலத்தால் அழியாமல் காப்பாற்றி வைக்கப்பட்டுள்ள உள்ளங்கள் புத்தகங்கள். எனவே, புத்தகங்கள் மூலம் புத்துணர்வு பெறுங்கள். ~ கிறிஸ்டியன் போவி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை சிவபூமி என்பதற்கு வரலாற்று ஆதாரம் உண்டு

இலங்கையை சிவபூமி என்று அழைத்தவர் திருமூல நாயனார்.

திருமூல நாயனார் வாழ்ந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால் இலங்கை சிவபூமியாக இருந்தது என்பது நிரூபணமாகும்.

தவிர, தேவார முதலிகளின் பாடல் பெற்ற தலங்களாக திருக்கோணேச்சரமும் திருக்கேதீச்சரமும் விளங்குகின்றன.

இதற்கு மேலாக, கதிர்காமத்தில் உறையும் முருகப்பெருமான் மீது அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்பாடிப் பணிந்துள்ளார்.

இவைதவிர, யுகம் கடந்து இலங்கை வேந்தனாக இராவணேஸ்வரன் ஆட்சி செய்தார் என்ற வரலாற்றை இதிகாசங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன

இலங்கை வேந்தன் இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன். திருநீறும் உருத்திராட்சமும் அவனின் அணிகலன்கள். பஞ்சாட்சரம் அவனின் உச்சாடன மொழி.

இதுவே வரலாறாக இருக்கையில், இலங்கை பௌத்த நாடு என்று ஆட்சி அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு சிலர் கூறி வருகின்றனர்.

இவ்வாறு இலங்கை பௌத்த நாடு என்று அடிக்கடி கூறுவதுகூட, பௌத்த நாடாக ஆக்குகின்ற ஒரு முயற்சியாகவே பார்க்கப்படும்.

உண்மையில் இலங்கையை சிவபூமி என்று சைவ மக்கள் கூறிக்கொள்வது கிடையாது.

ஏனெனில் அது அதுவாகவே இருக்க முடியும். இலங்கை சைவத்தின் விளைநிலம். சிவனின் இருப்பிடம்.

இங்கு வாழும் தமிழ் மக்கள் ஓம் எனும் பிரணவ மந்திரத்தை சதா உச்சரிக்கின்ற சால்பு கொண்டவர்கள்.

ஆக, வரலாற்றுச் சான்றுகளும் ஆதாரங்களும் அடிப்படையாக இருக்கும்போது, இலங்கை பௌத்த நாடு என்று ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் கூறுவதானது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

இலங்கை பௌத்த நாடு என்று பிரகடனம் செய்கின்ற செயற்கை முறையானது, இயற்கையான வரலாற்றை அழிக்கவல்லது.

அதாவது இலங்கை பௌத்த நாடு என்று பிரகடனம் செய்ய முற்படும்போது, இந்த நாட்டில் இருக்கக்கூடிய சைவ சமயத்தின் தொல்லியல் சான்றுகளை அழிக்கின்ற அல்லது அதனைத் தமக்குரியதென உரிமை கோருகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இத்தகைய பின்னணியிலேயே திருகோணமலை கன்னியா வெந்நீரூற்றை தங்களுடையதென பௌத்த தரப்புகள் உரிமை கோருகின்றன.

இதேபோல திருப்புகழ் பாடப்பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலயம் இன்று பௌத்த மயமாக மாற்றப்படுகிறது.

இந்த வரிசையில் முல்லைத்தீவு செம்மலை விவகாரமும் சைவ சமயத்தின் தொன்மையை - இலங்கை சிவபூமி என்ற வரலாற்றை வதம் செய்கின்ற நடவடிக்கையாக அமைவதால், இது விடயத்தில் நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக இந்தியா அதிகூடிய கரிசனை கொள்வது கட்டாயமானதாகும்.

### ஜனாதிபதி ஆணைக்குழு சாட்சியத்தில்

# சஞ்சீவ மீது குற்றச்சாட்டுக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகள் இருவர் சாட்சியமளித்தனர்.

இதன்போது முதலில் வட கொழும்பின் முதனாம் பிரிவிற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி நிரஞ்சன அபேவர்தன சாட்சியம் வழங்கினார். அவரிடம் ஆணைக்குழு உறுப்பினர்கள் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் புலனாய்வு துறையினர் வழங்கிய தகவல் குறித்து அறிந்திருந்தீர்களா? என வினவினர்.

அதற்கு பதிலளிக்கும் போது "அவ்வாறான விடயம் தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை. தாக்குதல் நடத்தப்பட்ட ஏப்ரல் 21ம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அப்போது கொழும்பு வடக்கிற்கு பொறுப்பாக இருந்த பொலிஸ அத்தியட்சகர் சஞ்சிவ பண்டாரவுடன் பேசியதாகவும் அவர் தாக்குதல் குறித்து எதனையும் கூறவில்லை எனவும்" அபேவர்த்தன சாட்சியமளித்தார்.

பின்னர், அப்போதைய தெமட்டகொட பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.டீ.அனில் ஜயந்த சாட்சியமளித்தார்.

"அவர், நான் ஏரல் 17ம் திகதி முதல் ஐந்து நாட்கள் விடுமுறையில் இருந்தேன். தாக்குதல் தொடர்பில் எச்சரிக்கும் எந்தவொரு கடிதமும் எனக்கு கிடைக்கவில்லை. 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளில் நான் களப்பணிகளில் ஈடுபட்டேன்" எனவும் சாட்சியமளித்தார்.

ஆனால் "அந்த எச்சரிப்பு கடிதம் 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்ததாக தெரிவித்து ஆவணப்படுத்துமாறு பொலிஸ அத்தியட்சகர் சஞ்சிவ பண்டார தனக்கு ஆலோசனை வழங்கினார்.

அவரின் கோரிக்கையை நான் நிராகரித்தேன். அதற்கு தாக்குதலின் பாரதூர தன்மை தொடர்பில் நான் அறிந்திருந்தமை முக்கியமானது. விசாரணை நடத்தப்பட்டால் நான் மாத்திரம் அதற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதை உணர்ந்து வைத்திருந்தமையால் அதனை நிராகரித்தேன்.

பொலிஸ் அதிகாரி சஞ்ஜீவ பண்டார மாத்திரமல்லாமல் அவரது தனிப்பட்ட உதவியாளர் உபேந்திர என்பவரும் குறித்த எச்சரிக்கை கடிதம் 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைத்தது போல பதிவு செய்யுமாறு தன்னை அறிவுறுத்தியதாகவும்" ஜயந்த சாட்சியமளித்தார். (இ-7)

மறவன்புலவு காற்றாலை பிரச்சினை

## 8 பேர் கைது செய்யப்பட்டு நேற்று பிணையில் விடுவிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன் புலவுப் பகுதியில் இடம் பெற்று வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி நிலையச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான மூன்று பெண்கள் உட்பட எட்டுப் பேருக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நேற்று பிறபகல் பிணை வழங்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை விசாரணைக்காக அழைத்து தடுத்து வைக்கப்பட்ட மறவன்புலவு கிராம மக்கள் பிரதிநிதி உட்பட எட்டு பொது மக்களே இவ்வாறு பிணையில விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு மீண்டும் மாசி மாதம் 28ஆம் திகதி இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஞா-30)

## உள்நாட்டு துப்பாக்கிகளுடன் மூவர் கைது

(கரடியனாறு)

சட்டவிரோத துப்பாக்கிகளுடன் மூவர் கரடியனாறு - பெரிய புல்லுமலை, பனிச்சேனை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மூன்று துப்பாக்கிகளே இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அத்தோடு கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள கரடியனாறு பொலிஸ் நிலையத்தில ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முல்லைத்தீவு மாவட்டத்தின் மேலதிக அரச அதிபர் இன்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராக் க.கனகேஸ்வரன் இன்று திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய இவர் முல்லைத்தீவுக்கு பணி இடம் மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா-10)

## சிவனொளிபாத மலைக்குச் சென்ற இரு இளைஞர்கள் கஞ்சாவுடன் கைது

(ஹற்றன்)

சிவனொளிபாத மலைக்குச் சென்ற இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா வைத்திருந்ததற்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மவுசாக்கலை சோதனைச் சாவடியில் வைத்து குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

23 வயதுடைய தெல்தொட மயிலபிட்டியவைச் சேர்ந்த இளைஞனும் 22 வயதுடைய பேலான பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சுய புத்தியில்லாத மனிதன் வாழ்வில் என்றும் ஒளியைக் காண முடிவதில்லை. தன்னம்பிக்கை இருந்தால் சுயபுத்தி தானாக வந்துவிடும்.

-ரவீந்திரநாத் தாகூர்

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# பஞ்சபூத அறிவு




பிரபஞ்சத்தைப் பற்றிய அறிவு என்று சொன்னால், அது பஞ்சபூதங்களின் தன்மையை உணர்ந்து கொள்வது தான். ஏனென்றால், எப்படிப் போனாலும், பஞ்ச பூதங்களைத் தவிர வேறொன்றையும் மனிதன் அறிவது இல்லை. ஆகையினாலே, இவைகளையெல்லாம் அறிந்து கொள்வதற்கு வேண்டிய சங்கற்பத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். காப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். எப்பொழுதுமே நமது மனத்தை ஏற்புச் சக்தி வாய்ந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஐந்து பௌதீகப் பிரிவுகளிடையேயும் நமது அறிவையும், மனத்தையும், ஜீவகாந்த சக்தியையும் செலுத்தி நமக்கு வலுவைத் தேடிக் கொள்கின்ற தவமே பஞ்சபூத தவம்.

எனவே, நமது மனத்தை ஒழுங்குபடுத்தி, அதற்கான ஒரு பயிற்சி மூலம் ஒவ்வொரு பூதத்தோடும் ஒன்றி, நின்று உயிர்காப்பைச் சரியான முறையிலும், அளவிலும் பெற்றுப் பழகி கொண்டால் வாழ்க்கையில், பஞ்ச பூதங்களான பொருட்களோடும், உயிர்களோடும், தொடர்பு கொள்ளும்போது, உயிர்க்கலப்பு பெறும்போது அந்த உயிர்க்கலப்பு முழுமையாகவும், சரியானதாகவும் வெற்றியும், இனிமையும் தரத்தக்கதாகவும் அமையும். இந்தப் பயிற்சியால் பஞ்ச பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றோடும் முறையாக, முழு அளவில், ஏற்ற சங்கற்பக் கருத்துக்களோடு உயிர்கலப்புப் பெற்றுப் பக்குவம் அடைந்த மனமானது, எந்த அனுபோகத்திலும், சலிப்போ, வெறுப்போ, தோல்வியோ ஏற்காத பக்கு வத்தைப் பெறுகிறது. இனிமையைக் காத்துக் கொள்ளும் திறமை பெறுகிறது. அத்தகு மனத்தினால் எந்தப் பொருளோடும் இணைய முடிகிறது. எந்தச் சக்தியோடும் இணைந்து பயன்கொள்ள முடிகிறது. அந்தப் பொருளால் அல்லது சக்தியால் விளையக்கூடிய பாதகங்களில் இருந்தும் காப்புப் பெற முடிகிறது. அந்தப் பொருள் மற்றும் சக்தி பற்றிய முழு விளக்கத்தையும், தெளிவையும் பெறவும் பயன் கொள்ளவும் முடிகிறது.



13 ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்று நாட்டிற்கும் எமது மாகாணத்திற்கும் யாழ்.மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த செல்வி வி.ஆசிகாவைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.பளுதூக்கல் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிருபா லேணர்ஸ் இன் அனுசரணையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கத்தில் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது. இக் கௌரவிப்பு நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் விருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும் நிகழ்வில் யாழ்.பளுதூக்கல் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்கள், கிருபா லேணர்ஸ் உரிமையாளர், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுத்துறை சார் அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# 10 ஆண்டுகளில் ஒருநாள் தரவரிசை பட்டியலில் முதலிடத்திற்கு வந்த இரண்டு இந்திய வீரர்கள்!




இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான டோனி மற்றும் கோலி கடந்த 10 ஆண்டுகளில் ஒருநாள் தரவரிசையில் முதல் இடத்திற்கு வந்த இந்திய வீரர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இந்திய அணியின் தலைவரான கோலி தன்னுடைய அற்புதமான துடுப்பாட்டம் மூலம் எதிரணியை கலங்கடித்து வருகிறார். குறிப்பாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் எதிரணிக்கு பீதியை கிளப்பும் வீரராக இருக்கிறார். அண்மையில் வெளியான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் கூட, அவுஸ்திரேலியா அணி வீரரான ஸ்மித்தை பின்னுக்கு தள்ளி முதலிடம் பிடித்தார்.


இந்நிலையில் கடந்த 2010 முதல் 2019 ஆம் ஆண்டு கால கட்டத்தில் ஒருநாள் போட்டிக்கான துடுப்பாட்ட வரிசையில் கோலி மற்றும் டோனி முதல் இடம் பிடித்துள்ளனர் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

டோனி உலகக்கோப்பை தொடருக்கு எந்த ஒரு தொடரிலும் ஓய்வில் இருக்கிறார். வரும் ஜனவரி மாதம் முதல் டோனி மீண்டும் சர்வதேச போட்டியில் விளையாடவுள்ளார் என்ற தகவல் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை வீரர்கள் உயிருடன் இருப்பார்கள்

## மஹேல கடும் சீற்றம்



இலங்கை கிரிக்கெட்டின் மீது முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன கடும் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு முதல் தர ஒரு நாள் போட்டிக்கான நெரிசலான கால அட்டவணையை இலங்கை கிரிக்கெட் அண்மையில் வெளியிட்டது. 66 போட்டிகளை பத்து நாட்களுக்குள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொடர் டிசெம்பர் 14 ஆம் திகதி தொடங்கியது. 25 அணிகள் நான்கு பிரிவுகளாக 66 முதல் சுற்றுப் போட்டிகளில் பத்து நாட்களுக்குள் எட்டு காலிறுதிப் போட்டியாளர்களைத் தீர்மானிக்கும். காலிறுதி டிசெம்பர் 28 திகதியும் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் முறையே டிசெம்பர் 29 மற்றும் 31 ஆகிய திகதிகளிலும் நடைபெறும்.

இது அதிகாரபூர்வ இலங்கை கிரிக்கெட்டின் முதல் தர ஒருநாள் போட்டிக்கான அட்டவணை. இதன் மூலம் தரமான வீரர்களை எப்படி நாம் உருவாக்க முடியும். போட்டிக்கு பின்னர் வீரர்கள் உயிருடன் இருப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என மஹேல ஜெயவர்தன டுவிட்டரில் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஜெயவர்தன சரியாகச் சுட்டிக் காட்டியபடி, ஒருநாள் அட்டவணை கிரிக்கெட் வீரர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அவர்களுக்கு ஓய்விற்கு போதுமான நேரம் இல்லாமல் தொடர்ந்து விளையாடும் போது உள்நாட்டு தொடர் முழுவதுமாக பாதிக்கும்.

உள்நாட்டு கிரிக்கெட் தொடர் முதலில் டிசெம்பர் 6 ஆம் திகதி நான்கு நாள் போட்டிகளுடன் தொடங்க திட்டமிடப்பட்டது. இருப்பினும் திருத்தப்பட்ட உள்நாட்டு கட்டமைப்பிற்கான அவசர பொதுக் கூட்டத்தில் (ஈ.ஜி.எம்.) பொது உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற இலங்கை கிரிக்கெட் தவறிவிட்டது. எனவே, ஒரு நாள் போட்டி தொடர் மூலம் போட்டியை நடத்த முடிவு செய்துள்ளனர்.

ஒருநாள் திட்டமிடப்பட்டிருப்பது நெரிசலானது என்பது உண்மைதான் என்று போட்டிக் குழுத் தலைவர் பந்துல திஸாநாயக்க ஒப்புக் கொண்டார். நாங்கள் டிசெம்பர் 6 ஆம் திகதி நான்கு நாள் போட்டிகளுடன் உள்நாட்டு போட்டியைத் தொடங்கவிருந்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவசர பொதுக் கூட்டத்தில் (ஈ.ஜி.எம்.) சரியான நேரத்தில் அதை அங்கீகரிக்க முடியவில்லை. எனவே சீசனின் தொடக்கத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டது. இதன் விளைவாக நெரிசலான ஒருநாள் கால அட்டவணை வெளியிடப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். (ஐ)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# மதுபோதையில் என் கையை உடைத்தார்

## இந்திய கிரிக்கெட் வீரர் மீது நபரொருவர் குற்றச்சாட்டு




இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் பிரவீன் குமார் மது போதையில் தன்னை அடித்ததோடு, தனது மகனை கீழே தள்ளி காயப்படுத்தியதாக நபர் ஒருவர் பரபரப்பு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

தீபக் சர்மா என்பவர் கூறுகையில், உத்தரபிரதேச மாநிலத்தின் மீரூட்டில் உள்ள பேருந்து நிலையத்தில் என் ஏழு வயது மகனுக்காக காத்து கொண்டிருந்தேன்.

அப்போது அங்கு காரில் வந்த என் பக்கத்து வீட்டில் வசிப்பவரும் இந்திய கிரிக்கெட் அணியின் வீரருமான பிரவீன்குமார் கீழே இறங்கினார்.

அவர் மது போதையில் இருந்த நிலையில் பேருந்து சாரதியை மோசமாக திட்டினார். பின்னர் என்னை திட்டியதோடு அடித்து என் கையை உடைத்தார்.

இதோடு என் மகனையும் பிடித்து கீழே தள்ளிவிட்டதில் அவனுக்கு காயம் ஏற்பட்டது.

இது குறித்து பொலிஸில் புகார் அளித்தேன், ஆனால் பிரவீன்குமார் இந்திய கிரிக்கெட் சர்வதேச அணியின் வீரர் என்பதால் என் புகாரை ஏற்கமுடியாது என கூறி உயர் அதிகாரியிடம் தெரிவிக்குமாறு கூறினார்கள்.

மேலும் இந்த விடயத்தில் சமாதானமாக போய்விடுமாறு வற்புறுத்துகிறார்கள். எனக்கு கொலை மிரட்டலும் விடுக்கப்படுகிறது எனக் கூறியுள்ளார். (ஐ)

# ஐ.பி.எல்.தொடரில் 14 வயது வீரர்



ஐ.பி.எல்.தொடருக்கான வீரர்களின் ஏலத்தில் 300 இற்கும் மேற்பட்ட வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த 14 வயது வீரரும் தெரிவாகியிருப்பது மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் உள்ளூர் தொடரான ஐ.பி.எல்.தொடர் நடைபெற்று வருகிறது. 2020 ஆம் ஆண்டிற்கான இந்த தொடரின் ஏலம் இந்த மாதத்தின் 19 ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

இந்த ஏலத்தில் கலந்து கொள்ள சுமார் 971 வீரர்கள் பதிவு செய்திருந்தனர். அதை எல்லாம் சரி பார்த்து, 332 பேர் மட்டுமே ஏலத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்த ஏலத்தில் 14 வயது ஆப்கானிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் நூர் முகமது அறிமுகமாக உள்ளார். ஏலத்தில் அவர் பங்கேற்கும் தகவல்களை ஐ.பி.எல் நிர்வாகம் அதிகாரபூர்வமாக உறுதி செய்துள்ளது.

ஆப்கானிஸ்தானை சேர்ந்த நூர் முகமதுவை, ஐ.பி.எல். ஏலத்தில் ஏதேனும் ஒரு அணி வாங்கினால் ஐ.பி.எல்.போட்டிகளில் இடம்பெற்ற குறைந்த வயது வீரர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

இதனால் இது ஒரு அதிசயம் மற்றும் அதிர்ஷ்டமாகவும் பார்க்கப்படும் மணிக்கட்டு பகுதியை பயன்படுத்தி சுழல் பந்து வீசும் திறமை படைத்த நூர் முகமது ஆப்கானிஸ்தான் அணியின் 19 வயதுக்குட்பட்ட அணியில் விளையாடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 310 கிலோ...

சிய தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த பகுதிக்குச் சென்ற கடற்படையின் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் போதை ஒழிப்பு பொலிஸார் இணைந்து அவர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 42 மற்றும் 45 வயதுடைய ஊர்காவற்றுறை சிவபுரம் மற்றும் சுட்டிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என கடற்படையின் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஞா)

## தனி இராஜ்ஜிய...

வது.

"ஜனாதிபதித் தேர்தலில் நாம் பாரிய வெற்றியை அடைந்துள்ளோம்.

இந்த வெற்றியில் ஒரு முக்கியத்துவம் காணப்படுகிறது. அதாவது, எந்தவொரு அடிப்படைவாதத்திற்கும் அடிபணியாமல் தான் இந்த வெற்றியை நாம் பெற்றுக் கொண்டுள்ளோம்.

72 வருடங்களுக்குப் பிறகு, சிங்கள மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வெற்றியில் அனைத்து இன மக்களுக்கும் இடமுள்ளது.

நல்லிணக்கம் என்பது பதாதைகளில் அல்லாது மக்களின் மனங்களில் இருந்து வரவேண்டும். இதுதான் உண்மையான வெற்றியாகும்.

எமது இந்த வெற்றியை இன்று எந்தவொரு அடிப்படைவாதிகளும் உரிமை கொண்டாட முடியாது. நாம் இனவாதிகள் அல்ல.

உங்களுக்கு வாக்குகளைத் தருகிறோம். நீங்கள் எங்களுக்கு தனி இராஜ்ஜியத்தை தாருங்கள் அல்லது தனி அலகு தாருங்கள் என இனி எவரும் எம்மிடம் கோர முடியாது. இந்த விளையாட்டுக்கள் எல்லாம் இனிமேல் எம்மிடம் செல்லுபடியாகாது" எனக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## கிளிநொச்சியில்...

யல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் இவரது கடையினை தீயிட்டு கொளுத்தியுள்ளனர்.

தற்போது இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஞா)

## விக்னேஸ்வரனி...

சந்திரன் இணைந்து உருவாக்கும் கூட்டு அணியுடன் கைகோர்த்துப் பயணிக்க தமிழ்த் தேசியக் கட்சி தயாராக இருப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்து பிரிந்த உறுப்பினர்கள் நேற்றைய தினம் மூத்த சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தலைமையில் தமிழ்த் தேசியக் கட்சி எனும் புதிய கட்சியினை ஆரம்பித்துள்ளனர்.

கட்சியின் ஆரம்ப நிகழ்வும் ஊடகவியலாளர் சந்திப்பும் நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போதே மேற்படி அறிவிப்பை ஸ்ரீகாந்தா வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,101)

## தாமரைப்பூ பறிக்...

இறங்கியுள்ளார். அப்போது குளத்தில் காணாமல் போயுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த நபரின் மனைவி பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பூநகரி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதுடன் பொதுமக்கள், சுழியோடியின் உதவியுடன் குளத்தினுள்தேடுதல் மேற்கொண்டு குளத்தின் நடுப்பகுதியில் புதையுண்ட நிலையில் குறித்த நபரை மீட்டுள்ளனர்.

சடலம்பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஞா-9,84)

## ரெலோவிலிருந்து..

வர் ஸ்ரீகாந்தா அறிவித்தார்.

புதிய கட்சியின் செயலாளராக எம்.கே. சிவாஜிலிங்கம், துணைத் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி சிவகுருநாதன், சட்டத்துறை செயலாளராக சட்டத்தரணி ஜெயகாந்தன், தேசிய அமைப்பாளராக சில்வெஸ்டர் விமல்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதுதவிர கல்வி, நிதி, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பது என்ற விடயத்தில் தமிழ்த் தேசிய்க் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ அமைப்பில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் ரெலோவின் பிரதான தரப்பு, வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளித்த நிலையில் ரெலோவின் யாழ். மாவட்டத்தின் ஸ்ரீகாந்தா உட்பட்ட ஒரு தரப்பினர் தமிழ் வேட்பாளராக களமிறங்கிய எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதனால் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் ஸ்ரீகாந்தாவை விசாரணையின் பொருட்டு இடைநிறுத்தியிருந்த நிலையில் அவர் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

# ஆசிய திருமதி அழகியாக இலங்கைப் பெண் தெரிவு

(கொழும்பு)

ஆசிய திருமதி அழகியாக 2019ஆம் ஆண்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட சமந்திகா குமாரசிங்க தெரிவாகியுள்ளார்.

மியான்மாரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியிலேயே அவர் இந்த கிரீடத்தை தனதாக்கிக் கொண்டதாக மிஷிஸ் ஏசியா இன்ரநஷனல் அமைப்பின் இலங்கை தேசிய பணிப்பாளர் சமந்த குணசேகர தெரிவித்தார்.

21 நாடுகளை சேர்ந்தோர் இம்முறை போட்டியிட்டுள்ளனர். வெயாங்கொடை பகுதியைச் சேர்ந்த 38 வயதானவரே சமந்திகா குமாரசிங்க, இவர் ஒரு பிள்ளையின் தாயாவார்.

2006ஆம் ஆண்டு தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றிற்காக அழகுக் கலை கலைஞராக முதன் முதலில் இந்த துறைக்குள் சமந்திகா குமாரசிங்க பிரவேசித்தார்.

2020ஆம் ஆண்டுக்கான திருமதி உலக அழகி கீரிடத்தை இலங்கையைச் சேர்ந்த கெரோலின் ஜுரி கடந்த 6ஆம் திகதி வெற்றி கொண்டிருந்தார்.

அமெரிக்கா - லெக்வேகாஸ் நகரில் நடைபெற்ற உலக அழகி போட்டியிலேயே அவர் இந்த கீரிடத்தை தனதாக்கிக் கொண்டார்.

35 வருடங்களின் பின்னரே இலங்கைக்கு இந்த கீரிடம் கிடைத்துள்ளது.

1984ஆம் ஆண்டு முதற்தடவையாக




இந்த போட்டி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த முதல் போட்டியிலேயே இலங்கைக்கு திருமதி உலக அழகி கிரீடம் கிடைத்திருந்தது.

கொழும்பு மேயராக கடமையாற்றும் ரோஸி சேனாநாயக்க 1984ஆம் ஆண்டுக்கான திருமதி உலக அழகி கிரீடத்தை தன.தாக்கிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

இதையடுத்து புதிய கட்சி தொடர்பான அறிவிப்பையும் வெளியிட்டிருந்த நிலையில் நேற்று புதிய கட்சியின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஞா-18,101)

## இலங்கைத்...

ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் தற்போது இந்த விடயத்தில் நீலிக்கண்ணீர் வடிப்பது வேடிக்கையானது என்றும் அவர் விமர்சித்துள்ளார். (ஞா)

## கட்சியினை...

யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் சட்டப்பிரிவின் பிரதானி திலக் மாரப்பனவுக்கு பணிப்புரை விடுத்திருக்கிறார்.

பலமானதொரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்துவதற்காகவே கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் திருத்தங்களை சமர்ப்பிக்குமாறு இவ்வாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய அவர் கட்சித் தலைமைத்துவத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பில் திலக் மாரப்பனவிற்கு பணிப்புரை விடுத்திருப்பதோடு, வெகு விரைவில் திருத்தங்களை சமர்ப்பிக்குமாறும் ஆலோசனை வழங்கியிருக்கிறார். (ஞா)

## தேர்தல் சட்டத்தில்..

வர்களுக்கும் இது குறித்து தெளிவுபடுத்தவுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்திருத்தம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் உள்ளூராட்சி மற்றும் நீதி அமைச்சிற்கு அறிவிக்கவுள்ளதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஞா)

## டில்லியில் வாகன..

இந்திய அரசு பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றியுள்ள குடியுரிமை சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிரான போராட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக் கிழமை டில்லியில் நடைபெற்ற போராட்டம் ஒன்றில் ஏற்பட்ட வன்முறையில் குறைந்தது மூன்று பேருந்துகள் தீவைத்து எரிக்கப்பட்டதாகவும், சில கார்கள் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் ஏஎன்ஐ முகாமை செய்தி வெளியிட்டுள்ளது.

டில்லியின் தெற்கு பகுதியில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், அங்குள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவர்கள் பெருமள்வில் பங்கெடுத்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக போராட்டக்காரர்களை நோக்கி காவல்துறையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதுடன், தடியடியும் நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பவம் நடந்தேறிய, தெற்கு டில்லியில் உள்ள நியூ பிரெண்ட்ஸ் காலனியை சுற்றியுள்ள பகுதிகளில்போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் பாதுகாப்புக்காக காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

நீரோகா லக்ன ஜய
திகதி 2019/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 0636
லக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 23 27 49 50

மஹஜன சம்பத
திகதி 2019/12/15
சீட்டிழுப்பு இலக்கம் 4070
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 2 8 7 5 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2019.12.15
சீட்டிழுப்பு இலக்கம் - 239
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 09 11 34 68
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 15-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2331
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 08 09 58 69
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 822
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.12.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 73,792,335/-
வெற்றி இலக்கங்கள் 13 20 36 45
ஆங்கில எழுத்து C
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15/12/2019
வெற்றி வாரம் 2708
வர்ணம் ஊதா
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 10 13 22 29
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,298,100
2019/12/16 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1092
சீட்டிழுப்பு திகதி 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை
N 29 31 36 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,539,788
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சீட்டிழுப்பு வாரம் 533
வர்ணம் மஞ்சள்
திகதி 15.12 2019 ஞாயிற்றுக்கிழமை
F 04 17 18 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,426,545
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## பதவி வெற்றிடம்

அலுவலக உதவியாளர் தேவை.
A/L கற்றவர்கள் நேரில் வரவும்.
பழைய மாணவர்களுக்கு முன்னுரிமை

The Express Institute
(1467) Irupalai Junction, Kopay.



## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு
அருகாமையில் 300 M தூரத்தில்
வாழைப்பயிருடன்
காணி விற்பனைக்கு உண்டு.
மின்சார வசதியும் உண்டு (1479)

தொடர்புகளுக்கு:
077 617 9876


## மாட்டுடன் மோது...

உயிரிழந்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி வியாபார நோக்கமாக மோட்டார் சைக்கிளில் அச்சுவேலியிலிருந்து நெடுங்கேணி சென்று பின்னர் நெடுங்கேணி - முல்லைத்தீவு வீதியினூடாக வவுனியா செல்லும்போது மாடு குறுக்கே பாய்ந்ததில் விபத்துக்குள்ளானவர் பொதுமக்களின் உதவியுடன் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## வாகனங்கள்...

மீறி மணல் ஏற்ற முற்பட்டால் வாகனங்கள் தீக்கிரையாக்கப்படும் என வடமராட்சி கிழக்கு மக்கள் மணல் கொள்ளையர் களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனைப் பகுதியில் தொடர்ச்சியாக கட்டுப்பாடுகள் இன்றி க்டந்த இரு வாரங்களாக மணல் அகழப்பட்டு கடத்தப்பட்டு வரும் நிலையில்

சட்ட ரீதியாக பல முன் நடவடிக்கைகளுக்கு முயன்றும் கட்டுப்படுத்த முடியாது போயுள்ளது. இதன் காரணமாக மக்கள் தாமாகவே முன் வந்து மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளனர். (ஞா-9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு


DELIVERY IN 3-5 DAYS

UK-550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்குட்பட்டது)

(C-8115)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம்

0768226240

V2 TRAVELS



## சுன்னாகத்தில் கடை வாடகைக்கு

சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு முன்பாக
கூல்பார் இயங்கிய கடை 01.01.2020 முதல்
வாடகைக்கு உண்டு.

(C-8542)

தொடர்புகளுக்கு:-
076 749 0219 / 021 224 0009



## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=

கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576



அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)



'உங்கள் பிள்ளைகளின் வெற்றி
எமது கைகளில்'

தரம் - 4, தரம் - 5

மாணவர்களுக்கான பிரத்தியேக
வகுப்புக்கள் வீடுகளுக்கு வந்தும்
கற்பிக்கப்படும். (1498)

தொடர்புகளுக்கு:
076 133 9628



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (1497)



## பதவி வெற்றிடம்

உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த 100 வருட பழமை வாய்ந்த
சர்வதேச நிறுவனத்துடன் இணைவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்



**பதவி நிலை:**
**வெல்த் பிளானேர்ஸ் மனேஜேர்ஸ் (Wealth Planner's Managers)**

**தகைமை**
- அரச சார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றியவர்கள் NGO
- அரச நிறுவனத்தில் பணியாற்றியவர்கள்
- தனியார் துறை ஆசிரியர்கள்
- சந்தைப்படுத்தல் துறை

Note:- மேலே குறிப்பிட்டவற்றுள் 2 வருட அனுபவம் உள்ளவர்கள்

**பதவி நிலை:**
**வெல்த் பிளானர் (Wealth Planner)**
- உயர்தர பரீட்சையில் தோற்றியவர்கள்
- ஓய்வு பெற்றவர்கள்
- மேலதிகமான வருமானத்தை எதிர்பார்ப்போர்
- பகுதிநேர வேலைவாய்ப்பை விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | : 021 222 1215, 076 523 1730 |
| வடமராட்சி | : 0768792992 |
| கிளிநொச்சி, முல்லைத்தீவு | : 0771182069, 021 228 5513 |

Note:- வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (1469)



# Techno World

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L 2018 தொழில்நுட்பப்பிரிவில் சித்தி பெற்று
பல்கலைக்கழகம் செல்லும்
68 மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

அனைத்து மாவட்டங்களிலும் முதலிடம் TECHNO WORLD மாணவர்களே

உயிர்முறை தொழில்நுட்பம்

| பெயர் | மாவட்ட நிலை |
|---|---|
| கலக்சிகா | 01 (யாழ்ப்பாணம்) |
| ரஜிதா | 01 (முல்லைத்தீவு) |
| விதுர்சன் | 01 (கிளிநொச்சி) |

# A/L 2022

## தொழில்நுட்பப் பிரிவு

விரைவில் ஆரம்பம்

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
A/L 2022 மாணவர்களுக்கான அனுமதிகளை
இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

(C-8551)

0770175346, 0771703549



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத
நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

(C-8543)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.